வெண்ணிலா

வெண்ணிலா



136
D03

28—3—45 [illegible]

"வெண்ணிலா" சந்தா விபரம்.

உள்நாட்டுக்கு

வருடமொன்றுக்கு	...	...	3—0—0
ஆறு மாதத்திற்கு	...	...	1-12—0
தனிப்பிரதி	...	... ...	0—4—0

வெளிநாட்டுக்கு

வருடமொன்றுக்கு	...	...	4—8—0
ஆறு மாதத்திற்கு	...	...	2—8—0
தனிப்பிரதி	...	... ...	0—6—0

அல்லது 38 சதம்.

விளம்பர விபரம்!

மேல் அட்டைக்கு	ரூ.	40
உள் அட்டைக்கு	ரூ.	30
ஒரு பக்கத்திற்கு	ரூ.	20
அரைப் பக்கத்திற்கு	ரூ.	10
கால் பக்கத்திற்கு	ரூ.	5

நீடித்த விளம்பரத்திற்கு எழுதுக!

மலர். 1. | 28—3—45 | இதழ். 2.

பொருளடக்கம்.

எண்.	பொருள்.	பக்கம்.
1.	தமிழின் தற்கால நிலை. (தலையங்கம்)	2.
2.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி (களவியல்)	5.
3.	தமிழ்ப் பற்று.	10.
4.	இயற்கை எருவா? செயற்கை எருவா?	15.
5.	லா மார்செய்யேஸ். (கவிதை)	21.
6.	எதிர்பாராதது! (சிறுகதை)	23.
7.	விஞ்ஞானமா?	27.
8.	அவனைப் பின்தொடர்ந்த அவள் மனம்.	30.
9.	தந்தையின் தனிப்பற்று.	34.
10.	தாய்மை.	37.
11.	கேலிப் பேச்சு.	40.
12.	[illegible]-செள. (சினிமா விமர்சனம்)	41.
13.	தம்பதி கடிதங்கள்.	43.

கதையில் காணும் பெயர்கள் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.

Directeur (Propriétaire [illegible]iqué) de la publicité P. Soun[illegible]
velou, 22, Rue de Candappa Moudéliar, Pondichéry.

தமிழின் தற்கால நிலை.

"உலகில், மக்கள் முதன்முதல் தோன்றியது குமரிக் கண்டம். அது இன்று இல்லாதழிந்தது கடற்கோளால். அவ்விடத்தே தோன்றிய மொழி. தமிழ்" என்கிறார் ஆராய்ச்சியாளர்.

"தமிழ்மொழி இனிமையுடையது; தனக்கு ஒப்பது மிக்கது மில்லாத் தனிச் சிறப்புடையது" என்கிறார் தமிழைச் சுவைத்த தமிழ்ப் பெரும்புலவர்.

பிறநாட்டுப் பேரறிஞர் தமிழைப்பற்றிப் பெருமைபடக் கூறியிருக்கிறார் அதில் காணும் இனிமைக்காக—மொழி வளத்திற்காக!

இத்தனை ஈடில்லாச் சிறப்புக்களையுடைய நந்தாய் மொழியாம் தமிழை, நாம் எவ்வாறு போற்றி வருகிறோம் என்று ஆராய்ந்து பார்ப்புழி, தாய்மொழியில் பற்றில்லாது, கற்றவர்களைப் போற்றாது, கற்கவும் முயலாது காலங்கழிக்கிறோம் என்பதே புலனாகிறது.

பிறமொழியில் இருக்கும் பற்றில் நூற்றில் ஒருபங்கு கூடத் தாய்மொழியாம் தமிழ்மொழியில் இல்லாதார், தமிழ்நாட்டில் அநேகம்பேர் உள்ளனர். தாய்மொழியில் பேசுவதும், எழுதுவதும் இழிவெனக்கருதும் இளைஞர்கள் ஏராளமாயிருக்கிறார்கள். அவ்வண்ணமே தாய்மார்களும், தந்தையர்களும். என்னே இவர்தம் தமிழ்ப்பற்று! தாய்மொழிப்பற்று!!

மேல்நாட்டை நோக்குவோம். அவர்கள் முதலில் தங்கள் தாய்மொழியை வளம்படுத்தி, போற்றி, கற்று, பின்னரே மற்றெல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளார்கள் என்பது சரித்திரத்தின் வாயிலாக உணரும் உண்மை.

தாய்மொழிப் பற்றில்லாத் தமிழர்கள், இருக்கும் இந் நிலையிலேயே இருந்தால், முன்னேற்றமடைவது முடியாதகாரியம் என்பது மிகைபடக் கூறுவதாகாது.

வயிற்றுப் பிழைப்புக்காகப் பிறமொழி பயின்றார் — பயில்வார்மீது குறைகூறும் நோக்கம் நமக்கில்லை. அதன் காரணமாகத் தமிழ்மொழியைப் பேணாதிருப்பவர்களையே குறைகூறுகிறோம்.

வெண்ணிலா

இந்நிலையில் இருக்கிறது தமிழ், தமிழர்களிடை. இனிச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் தமிழுக்குச் செய்யும் தொண்டு எம்மட்டுள்ளது என்பதை நோக்குவோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தினரால் நடத்தப்பெறும் வித்துவான் தேர்விற்கு, தனியே தமிழ் பயின்றுவர விரும்புவோர் இருபத்தைந்து ஆண்டுகள் நிரம்பப்பெற்றவர்களாயிருக்கவேண்டும். இது ஓராண்டிற்கு முன்பிருந்த சென்னைப் பல்கலைக் கழகத்தார் கட்டுப்பாடு. அதுபோதே பல தமிழன்பர்கள், இருபத்தைந்தை—இருபதாகச் செய்யவேண்டும் என்று மன்றாடினர். மன்றாடியது குற்றமாகப்பட்டதோ என்னவோ இதுபோது இருபத்தைந்து என்பதை முப்பதாகத் திருத்தியமைத்துள்ளனர். இது எதைக் குறிக்கின்றது? தமிழ்மொழி வளர்ச்சியை மேலும் தடைபடுத்துவதாக இல்லையா? ஆழ்ந்து சிந்தனைசெய்யுங்கள்! பள்ளியில் சேர்ந்து பயில வாய்ப்பிலார்மாட்டும் பிற தொழில்களில் ஈடுபட்டுத் தமிழ் பயிலவிரும்புவார்மாட்டும் இக் கட்டுப்பாடு பயன்தருவதாயிருக்கிறதா? பள்ளியில் பயில்வார்மட்டும் வித்துவான் தேர்விற்கு வரத் தகுதியுடையவர்கள் எனில், பல்கலைக் கழகத்தார் தனியே தமிழ் பயில்வாருக்குத் தேர்வில்லை என்று தெரிவித்துவிடலாமே!

சென்னைப் பல்கலைக் கழகத்தார் இக்கட்டுப்பாட்டை இயற்றியதற்குக் காரணம்? பள்ளியில் மாணவர்கள் பயில வரவில்லை என்றிருக்கலாமோ என்னவோ! உண்மையில் அவர்களுக்கு இக் கருத்து உடன்பாடெனில், அம் முட்டுப்பாட்டினை இக் கட்டுப்பாடினால்தான் தவிர்க்கமுடியுமோ? வேறு வழியில்லையோ? இந்தியாவில் இன்னும் எத்தனையோ பல்கலைக் கழகங்களிருக்கின்றன. அவைகள் இது போன்ற கட்டளை இட்டுளதா? எப்படி இடும்? அங்குள்ளவர்கள் தமிழரைப்போன்று, தாய்மொழிப் பற்றில்லாதவர்களா? இல்லையே!

பல்கலைக் கழகத்தார் கட்டுப்பாட்டிற் கிணங்க ஒருவன் தனது 33-வது ஆண்டில் வித்வானாகமுடியும். ஆனால், இடையில் ஓராண்டும் தேர்வில் தோல்வியுறக்கூடாது. இல்லையேல் ஆண்டு அதிகரிக்கும். இந்நிலை ஏற்படின் ஒருவருக்கு, மேன்மேலும் படிக்க நம் நாட்டின் பொருளாதாரநிலை இடந்தருகிறதா? அதைச் சிறிது யோசிக்க வேண்டாமா?

தமிழார்வங்கொண்டு தமிழ் பயில்வாரும் உண்டு. பதவிபெறுங் காரணமாகத் தமிழ் கற்பாரும் உண்டு. இவ் விருபாலாரையும் இக் கட்டுப்பாடு எத்துணை வருத்துகின்றது என்பதைச் சிறிதே சிந்தனை செய்யவேண்டும்.

ஆசிரியர்களா யுள்ளவர்களைமட்டும் இவ்வாணை கட்டுப்படுத் தாது. ஆம்! அவர்கள் அத் தேர்வுக்கு அதிகம் செல்வதற்கில்லை ஓய் வின்மை காரணமாக!

ஆசிரியர்களுக்குமட்டும் இரக்கங்காட்டி மற்றவர்களைப் புறக் கணிப்பதில் பல்கலைக் கழகத்தார் பெறும் பயன்தான் என்னே! பல்கலைக் கழகம் என்பது மக்கள் அறிவுவளர்ச்சிக்கு ஆக்கந்தேடுவதும், கலைவளர்ச்சியைக் காப்பதுவுமன்றோ! ஆமெனில் இக்கட்டுப்பாடு அறிவுவளர்ச்சிக்கு ஆக்கந்தேடுவதாகுமா? கலைவளர்ச்சியைக் காப்பதாமா?

தமிழர்களிடைத் தமிழ் வளரும் வகையையும், பல்கலைக் கழகத்தார் தமிழ்வளர்க்கும் முறையையும் இதுகாறும் கூறினோம்.

இவைகளையெல்லாம் இன்னும் நன்றாய்ச் சிந்தித்து, தமிழர் நன்மைக்காகப் பாடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம் சென்னைப் பல்கலைக் கழகத்தாரை.

பொதுமக்களிடைத் தமிழை வளரச்செய்யவேண்டும். அதற்கு நம் நாட்டில் பத்திரிகைகள் இன்னும் பல ஆயிரக்கணக்கில் தோன்ற வேண்டும். பத்திரிகைகளைப் பாமரரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் உதவவேண்டும். பள்ளியில் கட்டாயக் கல்வியாக இருக்க வேண்டும் தமிழ். இவைகளை எல்லாம் எப்படிச் சாதிக்கமுடியும் என்று எண்ணாதீர். மனம் உண்டானால் இடம் உண்டு.

தேசியத் தலைவர்கள் முதலில் கவனிக்கவேண்டியது தேசிய பாஷையையல்லவா? அவர்களும் இதில் கலந்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதே எமது விருப்பம்.

ஒற்றுமையே எல்லா முன்னேற்றத்திற்கும் முதன்மையான கருவி எனலாம். அந்த ஒற்றுமை, தாய்மொழியைப் போற்றிவளர்ப் பதால் உண்டாகுமென்பது தெளிவு.

வாழ்க தமிழ்!

வெண்ணிலா

தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி

நாவலர் S. சோமசுந்தர பாரதியார் M.A. B.L. அவர்கள்

களவியல்.

அகப்புறத் திணைகளின் பருப் பொருளை மேல் இப் படல முதல் ஈரியல்களில் தொகுத்துக்கூறிப், பின் அகவொழுக்க நுண் பொருள்களான அன்பினைந்திணைகளை இவ் வியலில் வகுத்து, அவற்றின் துறை முதலிய உறுப்புக்களைத் தொல்காப்பியர் விரிக்கின்றார். அவைகளை முறையே **களவு — கற்பு** என்றிரு கைகோள்களாக வகுத்து, அவற்றின் நுணுக்கங்களை அவ்வப் பெயரா னீரியல்களில் விளக்குகிறார். தலைமக்கள் தாமே தமியராய் முதலில் எதிர்ப்படும் காட்சிமுதல், நாளும் வளருமவர் காதல் பிறரறிய வெளிப்படும் வரை, காதலரதனை மறைத்தொழுகலால், அவர்தம் கரந்த காதல் ஒழுக்கம் களவெனப்படும். காதல் வெளிப்பாடு கற்பென வழங்கும். பிறரறியாமல் இருபாலார் மறைத்தொழுகும் காதல், 'மறை' அல்லது 'களவு'; உலகறியக் காதலர் மணந்து கணவனும் மனைவியுமாய்க் கூடிவாழ்தல், 'கற்பு' அல்லது 'மனையறம்' எனப்படும். இவ் விரண்டனுள் களவுக் காதலொழுக்கம் இவ்வோத்தில் விரிக்கப் பெறுதலால், இது களவியலெனப்பட்டது.

இதில், முதற் சூத்திரம் களவொழுக்க விளக்கம். தலைமக்களின் முதலெதிர்ப்பாடானகாட்சி. 2-வது சூத்திரத்தும், எதிர்ப்பட்ட தலைமக்கள் தம்முள் ஒருவரை யொருவர் முன்னறியாமையால், 'யாரோ' எனக் கடுக்கும் ஐயம். 3-வதிலும், ஐய மகலத் தேர்ந்து தெளிதல். 4-வதிலும், அவ்வாறு தெளிந்தாருளக் குறிப்பை விழிவாய் [illegible]

யால் இருவரு மயர்வற உணர்தல். 5-வது 6-வது நூற்பாக்களிலும் அவையே கூறப்படுகின்றன். அடுத்த 7-8 சூத்திரங்கள், முறையே ஆண்மை பெண்மைகளின் சிறப்பியல்பு, அதாவது இரு பாலோருளப்பான்மைகளைக் குறிக்கின்றன. அப்பாற் சிறப்பியல்கள், அவர் காதலொழுக்க முறையின் நிறை உரைகளைத் தெளிப்பவையாதலின், அவ் வொழுக்கத் துறைகளை உய்த்துணரும் பொருட்டு அவற்றுக்கு முன் சுட்டப்படுகின்றன. 9-முதல் களவொழுக்கம் விரிக்கப்படும். தம்முள் ஒத்த காதலுண்மையை உணர்ந்த இருவரும், தத்தமியல் பாலதை மறைத்தொழுகும் முயற்சியில் அடையும் நிலை வேறுபாடுகளை 9-வது நூற்பா தொகுக்கும். அந்நிலையில், அவரிடை நிகழும் செய்திகளிற் சிறந்த சிலவற்றை 10 வது சூத்திரம் பகரும். 11 முதல் 16 வரையுள்ள நூற்பாக்கள், களவிற் றலைவன் கூற்றிடம் கூறும். 17 முதல் 19 வரை, தலைவியின் கிளவி யருமையும், 20-21-அவள் கூற்று நிகழ்தற்கேற்ற விடமும் குறிக்கும்; 22- தலைவிக்கும், 23- தோழிக்கும், 24- செவிலிக்கும், 25- பெற்ற நற்றாய்க்கும், 26- அவ்விருதாயர்க்கும், முறையே கூற்று நிகழுமிடங்களைக் கூறும். 27- பெண்ணீர்மையாற் பிறங்கும் தலைவி காதலியல் வேறுபாடு சுட்டும். 28-ம் சூத்திரம், தலைமக்கள் பாங்காற்றுணையின்றித் தாங்களே காதற்றூதராய்ச்சென்று கூடுதலுண்டெனக்கூறும். இனி, களவு கூட்டக் களஞ்சுட்டு முரிமை தலைவியதென்று 29-லும், ஒரோவழி தோழியுங் களங்குறிப்பாளென 30-லும் கூறப்படுகின்றன. 31- களவிடைக் காதலர் அளவா நாட்களும், 32- தலைவி உற்றூர்க்குரைத்து தன்மறை மணமுடிப்பார்த்தேர்ந்து அறத்தொடு நிற்கும் தகவும் சுட்டும். அவ்வாறவள் தேறிக் கூறற்குரிய இருவருள், செவிலியின் சிறப்பு 33லும், தோழியுரிமை 34-35லும் விளக்கப்படும். தலைவி களவைத், தோழி தேரும் மூவகை முறையும் 36லும், அப்படித்தேர்ந்து தெளியும்வரை, தோழி தன்பால் குறையிரந்து பின்னிற்கும் தலைவனுக்கிடந்தராமை 37லும், தலைவியொருப்பாடறிந்த பின் அவளைத் தலைவனிடம் சேர்க்க வழி வகைநாடிக் கூட்டுந்திறனும் தோழியினுரிமை என்று 38லும் குறிக்கப்படுப. 39 முதல் 42 வரையுள்ள சூத்திரங்கள், களவுக் காலத்துத் தோழி தா[illegible]ல் குறியிடம் பெற்ற தலைவன் இரவிலும் பகலிலும் ஏற்றவழி தலைவியைக் கூடுமுறை கூறும். 43- தலைவன் சிறைப்புறம் நிற்க, தலைவியும் தோழியும் வரைவு வற்புறுத்திக் குறிப்பானவற்குக் கூறுமுறை சுட்டும்.

வெண்ணிலா

இனிக் களவுகாலத்துத், தலைவிபோற் காதலால் தொடலையும் தொழிலும் துறந்து ஒழுகுதல் தலைவனுக்கில்லா அணியல்பு 44லும், அதுபோலவே, களவொழுக்கத்துத் தலைவன் இரவு வருவதின் ஏதமும் ஊறும் நினைந்தினைதல் தலைவிக்கன்றித் தலைவற்கில்லாமை 45லும் சுட்டப்படுப. தலைமகள் களவுக் காதலை, அவள் தந்தையும் தன்னையரும் பிறர் கூறுமல் தாமே குறியானறிதலும், தாய் செவிலி போலக்கூற வுணர்தலும் முறையே 46-47 சூத்திரம் சொல்லும். களவொழுக்கம் பிறர்க்கு வெளிப்படுவது தலைவனல் நேர்வதன்றித் தலைவியால் நேராமை 48வதிலும், அவ் வெளிப்பாட்டாலாயினும், வெளிப்படுமுன் தலைவியின் குரவர் நேர்ந்து கொடுக்கப் பெற்றாயினும் தலைமகன் வரைந்து கோடல் 49வதிலும் கூறப்படுகின்றன. இறுதியில், களவு வெளிப்பாட்டின்பிறகு, நெட்டிடையிட்டுப்பிரிதல் கூடாமையின், வரையுமுன் பிரிவு நீளாதலங்கிய இருவகையன்றிப் பிறவகையின்மை 50வது சூத்திரம் சுட்டும்.

சூத்திரம். 1.

"இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை,
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே"

கருத்து:- இது, களவொழுக்கத்துக் காதற் கூட்டத்தை ஆயுங்கால், அது வேதியர்வகுத்த கூட்ட மெட்டனுள், காதலளவில் கந்தர்வ மணத்தியல்பை ஓரளவொக்கும் எனக் கூறுகிறது.

பொருள்:- யாவரும் உகக்கும் மனமலர்ச்சியும், அதற்குத் துணையாய் மக்கள் மதிக்கும் பொருளும், அவை இரண்டையும் விளக்கும் அறனுமாக மூன்றும் சேர்ந்த அன்பு தழுவிய ஐவகை ஒழுக்க நெறியில் காதற்கூட்டத்தை ஆராயுங்கால், அது வேதியர் மருங்கில் ஓதப்படும் கூட்டமெட்டனுள், இசைநூற்படி யமைந்த இனிய யாழ்வல்ல கந்தருவமணத்தைக் காதலியல்பால் ஒரோவழி ஒக்கும்.

குறிப்பு:- ஒத்த காதலர் உயிரொன்றிக்கூடும் அன்பொழுக்கம், துவக்கத்தில் பிறர்க்கு மறைக்கப்படினும், மணத்தொடு மலர்ந்து வயதொடு வளர்ந்து இருவரையும் மனையறம் புகுத்தலால், அது அறத்தொடு புணர்ந்ததாகும். இதை,

**"அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம்
புறத்த, புகழுமில."**

என்பதில் 'ஏ' காரமும், "எல்லாம்" என்பதும் தமிழரின்பக் கருத்தை வற்புறுத்தலாலறிக. பொருள், அறமும் இன்பமும் விளைமுளையாதலை,

**"அறனீனும், இன்பமுமீனும், திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"**

எனும் குறளிற்காண்க. இழி காமப் பெருந்திணையும் ஒருதலைமுனைத்த கைக்கிளையும் விலக்கி, அக உரிப் பொருள்களான இருவயினொத்த அன்பினைந்திணைக் காதற்கூட்டத்தை மட்டும் சுட்ட,

**"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக்கூட்டம்"**

என்று கூறப்பட்டது. இதில் "**காமம்**" — ஆசை சுட்டும் வடசொலன்று. அன்புப் பொருளுடைத் தமிழ்ச்சொல்லாகும்; அன்பை அதாவது காதலைக் குறிக்கும். இவ்வியலிலேயே, "காமத்திணையில்" எனக் காமத்தை ஒழுக்கத்தொடு சேர்த்துக் கூறுதலானும், "**காமஞ்சான்ற**" எனக் கற்பியலில் கூறுதலானும், இழிதரு காமம் ஒழிய விலக்கி, மேதகு கடவுட்காதலையே காமத்தமிழ்ச்சொல் கண்ணுதல் தேற்றம். மேலும், '**கற்பும் காமமும்**' எனும் கற்பியற் சூத்திரத்தின்கீழ், "**காமம்**" என்பதற்கு அன்பென்றே நச்சினார்க்கினியர் பொருள் கொள்ளுதலுமறிக. இவ்வியலில் தலைவனைக் காமக்கிழவனெனக் கூறுதலும் இதனை வலியுறுத்தும். ஆசை குறிக்கும் காமச்சொல்லை, வடநூலார் காதலின்பத்துக்கு வழங்குதல் இலக்கணை. அதனாலிங்குக் "காமக்கூட்டம்" என்றது. அறத்தொடுபட்ட அன்புத்திணைக் கூட்டத்தைக் குறிப்பது தெளிவாம்.

இனி, வடவர் உவந்துழிக்கூடி உவந்துழிப்பிரியும் கந்தருவக் கூட்டம். பிரிவறுபெட்பானுயிரொன்றிக்கூடி, மணமாய்மலர்ந்து மனைமாண்பு வளர்க்கும் தமிழரின் களவறக்காதலை ஒவ்வாக் காதலின் "**காமக்கூட்டம்** யாழ்த்துணைமையோர் மணமாம்" என்றீர்; காதல் மீதூரக்கலந்து மகிழ் கந்தருவர்கூட்டம், நீளாது நிலையாது உலகறிய மணந்து நிலவாதொழியினும் காதலால் நேர்தலால். காதல் வேண்டாத ஆரியர் பிறவனைக் கூட்டமேழையும் விலக்கி. களவுக்கூட்டம்,

வெண்ணிலா

காதலளவில் கந்தருவர் புணர்ச்சியை ஓரள வொக்குமெனுங் குறிப்பால், தமிழர் களவுத்திணை அன்புக்கூட்டம், காதலொடுகூடுங் கந்தருவர் கூட்டத்தியல்பே என்று கூறப்பட்டது. "மறையோர்" என்றது, வேதமோதும் ஆரியரை. "தேம்" என்பது, இடப் பொருளுருபு. அதனைத் "தேயத்தின்" மரூஉவாக்குதல் பொருந்து பொருளுதவாது.

மன்றல், மணம், என்றசொற்கள், இங்குக் கூட்டம் குறிக்கும். கரணமொடு மணப்பது, நூல்களில் வரைதல் அல்லது வரைவென வழங்கும்.

களவிலக்கணத்தை விளக்குவதோடமையாது, தமிழ் நூலில் ஆரியர் எட்டுக் கூட்டங்களை இழித்துப் பேசுவதேன்? எனில், தொல்காப்பியர் காலத்துக்கு முன்னமே ஆரியப்பார்ப்பனர், தமிழ் நாடு புகுந்து இடம்பெற்றுத் தங்கித் தம் வடகலையை வளர்க்கத் துடங்கியதால், அக்காலத்தவர் மொழிப் பேரிலக்கணமான ஐந்திரமும் பிறநூலும் ஆராய்ந்து, அவற்றின் வேறுபட்ட தமிழ் மரபுகளைத் தமிழரொடு அவ்வாரியப் புலவருக்கும் விளக்கவேண்டி, இரு கலை மரபு வேறுபாடுகளை இடையிடைக் குறிப்பாராயினர்; அவற்றுள் இம் மணமரபு வேற்றுமை பெரிதாதலின், அதையிங்குச் சுட்டினர். காதலையிகழ்ந்து, மக்களைப்பெற்றுத் தம்மினம் பெருக்குவதே ஆரியமணத்தின் அடிநோக்கம்; கன்றிய காதலால் ஒன்றி யறம் வளர்ப்பது, தமிழ்மண மரபு. இதனை, இன்னூற்பா விதந்து விளக்குகிறது. எனவே,

> **"என்றுங் குன்ரு அன்பின் விளைவாய்**
> **அறத்தொடு புணர்ந்த காதல்வாழ்வே**
> **களவுத்திணை"**

எனக் களவியல் விளக்குவது, இச்சூத்திரக் கருத்தெனக் கண்டுதெளிக.

தமிழ்ப் பற்று

கனக-சுப்புரத்தினம்

[ஆசிரியர் கனக-சுப்புரத்தினம் (புரட்சிக் கவிஞர். பாரதிதாசன்) அவர்களைப்பற்றித் தமிழ்நாட்டாருக்கு அறிமுகப்படுத்தி வைக்கவேண்டிய அவசியமில்லை. அவர் எல்லோர்க்குந் தெரிந்த ஒருவர். அவரது தமிழ்க்கவி, தமிழுக்கே தனிச் சிறப்பைத்தருவது.

'தமிழ்ப்பற்று'க் கொண்டோர் என்பவர், முக்கியமான ஒன்றை மறந்து விடுகின்றனர். தமிழமுதூட்டும் தமிழ்ப்புலவர் நிலையை, அவர்கள் சிறிதும் கவனிப்பதில்லை. அப்புலவர்கட்கு, உற்சாகமூட்ட முன்வருவதில்லை. போதிய தீ இல்லாமல், நெருப்பின் அனலிலேயே சோறுசமைக்கலாம் என்றெண்ணுவது போலிருக்கிறது. தமிழ்ப் பற்றுடையார் தமிழ்ப் புலவரைப் போற்றுவது. இக் கருத்தை அழகாக அமைத்துள்ளார் கவிஞரவர்கள். மேலே படியுங்கள்.]

அவர்கள் உணர்ச்சியுள்ள இளைஞர்கள்; தமிழ்ப்பற்று மிக்கவர்கள்! சென்ற ஆண்டில், கோடையில் மாலைப்போதில் அவர்கள் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது கந்தசாமி சொன்னான் தமிழுக்கு நம்மாலான தொண்டு செய்யவேண்டும் என்று.

கந்தசாமியின் அச்சொற்கள் மற்ற இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன! தமிழுக்குத் தொண்டு செய்யவேண்டும். ஆம்! என்று உறுதிசெய்தார்கள் அனைவரும்.

தமிழ்க்கழகம் என்றபெயரால் ஒரு நிறுவனம் நிறுவப்பெற்றது. ஆண்டு ஒன்றுக்குள் "தமிழ்க் கழகத்தில் வந்து சொற்பொழிவாற்றாத தமிழ்ப்புலவரே தமிழ்நாட்டில் இல்லை"யென்று சொல்லும்படி ஆயிற்று. ஆண்டுவிழா மூன்றுநாள் நிகழ்ச்சியாக மிகச் சிறந்தமுறையில் கொண்டாடப் பெற்றது. ஊர்மக்கட்குத் தமிழ்க் கழகம் என்றால் கற்கண்டு, அப்படி ஒரு கழகமும் இதுவரை ஊராரின் நெஞ்சைக் கவர்ந்திருக்கமுடியாது. தமிழ்க் கழகத்தார், தம் கழகத்தின் சார்பில் ஒரு தமிழ் விடுதி ஏற்படுத்தத்

திட்டம் போட்டார்கள். உயர் வகுப்பில் நுழையும்படி மாண வர்கட்குப் பயிற்சி யளிப்பது தான் தமிழ் விடுதியின் நோக்கம்.

சரியாக நாற்பது மாணவர்கள் தமிழ் விடுதியில் சேர்ந்தார்கள். மூன்று ஆசிரியர்களைச் சம்பளத் திற்கு அமர்த்தினார்கள் கழகத் தார். வகுப்புக்கள் செவ்வனம் நடந்துவந்தன.

மாதக்கடைசியில், கழகத்தார் கேட்பதற்குள், மூன்று ரூபாய் விழுக்காடு நாற்பது மாணவரும் நூற்றிருபது ரூபாயைக் கொண்டுவந்து குவித்தார்கள். கழகத்தார் அனைவர்க்கும் ஒரே மகிழ்ச்சி!

கழகத்தின் ஆசிரியர் மூவரில் வீராசாமிப் புலவர் குறிப்பிடத் தகுந்தவர். நிறைந்த தமிழ்ப் புலமை; பயிற்றுமுறை, பண்பு, ஒழுக்கம், எதிலும் குறைந்தவ ரல்லர். மாதம் பிறந்து ஐந்து தேதியும் ஆய்விட்டது. எட்டாந் தேதி சம்பளம் வந்துவிடும் என்று தமிழ் விடுதியின் ஆசிரி யர்களில் இரண்டுபேர் பேசிக் கொண்டார்கள். அதற்கு முன்பே சம்பளம் கைக்கு வந்து விடும் என்று வீராசாமிப் புலவர் நம்பினார். கழகத்து இளைஞர்கள் உணர்ச்சி யுள்ளவர்கள். தமிழ்ப் பற்று மிக்கவர்கள்.

ஆறுந்தேதி இரவு பத்துமணி யடித்தது. வீராசாமிப் புலவர் குடும்பம், பசியின் நிலைக்க முடியாத ஆழத்தில் முழுகிற்று. அந்தத் துன்பநிலையிலும், புல வருக்கும் அவர் மனைவிக்கும் ஒரு மகிழ்ச்சி; என்னவென்றால் ஐந்து பிள்ளைகளும் பசியால் விம்மியழுது சோர்ந்ததால் குப்புறப்படுத்துத் தூங்கிவிட் டார்கள்.

புலவர், தம் ஒட்டிய வயிற்றை மேலும் ஒரு கையால் அழுத் தியபடி, குடியிருக்கும் பகுதி யில் ஒருபுறம்கிடந்த முறத்தைத் தூக்கிக்,கூரைமேல்செருகிவிட்டு அந்த இடத்தில் சோர்ந்து உட் கார்ந்தார். எதிரில் பெருத்த வயிற்றோடு அவர் மனைவி நின்று கொண்டிருந்தாள். பெருத்த வயிறென்பது உணவுண்டதால் பெருத்ததன்று. அந்த அம்மா வின் வயிற்றில் ஆறுவது குழந் தை வாழ்கின்றது.

“பெருங்காற்று! விடிந்தால் அமைதி” என்றார் புலவர்.

காலையில் சம்பளம் வருவது உறுதிதானே என்றாள் மனைவி.

புலவர் சொல்லுகிறார்: அதி காலையில் கழகத் தலைவரும், பொருட்காப்பாளரும் வெளியிற் போகுமுன் அவர்களை விளித்துக்

கொள்ளுகிறேன். சம்பளத்தை வாங்கிக்கொண்டு நேரே வீட்டுக்கு வருகிறேன். உன்னிடம் நாலைந்து ரூபாயைப் போட்டு விட்டு நேரே கடைக்குப் போய் விடுகிறேன்! நீ காலையில் விறகு முதலியவைகளை விரைவாக வாங்கிவிடு. நான் கடையில் ஆக வேண்டியதை முடித்துக் கொண்டு ஓடிவந்து விடுகிறேன். அரிசி முதலியவைகளை நாம் சில் லரையாக அவ்வப்போது வாங்குவது சரியல்ல, ஒரு மூட்டை அரிசி, ஒரு மாதத்திற்கு வேண்டிய பல சரக்கு வாங்கிவந்து விடுகிறேன். நான் கடைத்தெருவில் சிற்றுணவு பார்த்துக் கொள்ளுகிறேன். காலையுணவைச் சிறிது நல்லமுறையில் ஏற்பாடுசெய், பிள்ளைகட்கு!

மனைவி: ஆமாம் இராப்பட்டினி கிடந்த பிள்ளைகள். இப்போதே ஒரு மாட்டுவண்டி பேசி வைத்து விடலாமே, அரிசி முதலியவற்றை ஏற்றிவர!

புலவர்:- காலையில் பார்த்துக் கொள்ளலாம். வண்டி கிடைக்கும்.

"மறுநாள் காலையில் எதிர் பார்க்கும் இன்பத்தை" நினைத்த புலவரும் மனைவியும் அந்தத் துன்ப இரவிலும் தூங்க முடிந்தது.

கழகத் தலைவரும் பொருட் காப்பாளரும் அலுவலை முன்னிட்டு வெளிச் செல்லுமுன் புலவர் அவர்களைக் கண்டார். அவர்கள் கழகக் கட்டிடத்தில் போயிருக்கும்படி சொன்னார்கள் புலவரை.

காலை எட்டுமணியடித்து விட்டது. வழக்கப்படி வகுப்புக்கள் தொடங்கின. புலவர் சத்தவண்டியை அனுப்பிவிட்டார் நடுப்பகல் பன்னிரண்டுமணிக்கு வரச் சொல்லி! வண்டிக்காரன் நல்ல மனிதன். பன்னிரண்டுமணிக்குத் தலைவர் பூசையில் இருந்தார். பொருட்காப்பாளர் புதிய வெளியீடு ஒன்றைக் கருத்தாகப் படித்துக்கொண்டிருந்தார் சாப்பிட்ட பின்.

ஒருமணியாயிற்று கழகத்தின் தலைவரும் பொருட் காப்பாளரும் சிறிதுநேரம் ஓய்வெடுத்துக் கொண்டார்கள் என்று செய்தி கிடைத்தது புலவருக்கு. ஓய்வு என்பது அவர்கள் தூங்குவதின் பெயர்.

இரண்டுமணிக்கு வகுப்புக்கள் தொடங்கின. மாலை ஆறுமணிக்குத் தலைவரையும் பொருட்காப்பாளரையும் கழகக் கட்டிடத்தில் புலவர் காணமுடிந்தது.

தலைவர் புலவரைக் கேட்டார் "இந்த மாதத்தில் வகுப்பு எத்தனை நாட்கள் நடந்தன" என்று-

ஆயுதபூசைக்காக ஒன்பது நாட்கள் வகுப்பு இல்லை. கழகத்தில் வடக்கத்தியார் இறங்கி இருந்ததால் மூன்றுநாள் வகுப்பு நடக்கவில்லை. மதகடிபட்டுச் சந்தைக்குப்போய் மாடு வாங்கிவர என்னை அனுப்பினீர்கள்; அது ஒருநாளும் சேர்ந்தால் பதின்மூன்றுநாட்கள் போகப் பதினேழுநாட்கள் வகுப்பு நடந்தது என்று புலவர் பதில் சொன்னார். தலைவர், பொருட் காப்பாளருக்குக் கீழ்வருமாறு கட்டளை பிறப்பித்தார்: கால்ரூபாய் விழுக்காடு பதின்மூன்று நாளின் தொகையைக் கழித்துக்கொண்டு மீதியைப் புலவரிடம் கொடுத்துக் கையொப்பம் பெற்றுக் கொள்ளுங்கள்.

பொருட் காப்பாளர் பிரஞ்சு நன்றாகப் படித்தவர், மொத்தச் சம்பளத் தொகையைப் பணமாக்கி அதில் பதின்மூன்று நாளின் மொத்தத் தொகையைக் கழித்து மீதியை எட்டால் வகுத்து ரூபாயாக்கி, எதிரில் வைத்தார். புலவர் நாலேகால் ரூபாயைப் பார்க்கிறார் உறுத்தி.

அப்படியானால் எனக்கு மாதச் சம்பளம் ஏழரை ரூபாயா என்று வியப்போடு கேட்டார் புலவர்.

நூறாயிர ரூபாய்ச் சொத்துள்ள முன்னேற்றக் கழகத்தில் உம்போன்ற புலவர் வகுப்பு நடத்துவதற்கு ஆறு ரூபாய் தானே கொடுக்கிறார்கள் என்றார் தலைவர்.

நான் கூடுதலாக எதிர்பார்த்தேன்- இது புலவர் சொன்னது.

ஏழரை ரூபாய் அதிகம் என்பது எங்கள் கருத்து— தலைவர் சொன்ன பதில் இது. இங்கு ஆட்சிசெலுத்தும் பிறநாட்டார், உங்களைவிட அதிகமாக மதிக்கிறார்கள் தமிழை.

இப்படிக்கு. வீராசாமிப் புலவர்.

பிறநாட்டினர், தம் பிரஞ்சு மொழி போலவே எண்ணுகிறார்கள் தமிழையும். அவர்கட்கு என்ன தெரியும்? ஆதலால் பிரஞ்சு மொழிக்குக் கொடுக்கும் சம்பளத்தைப் போலவே தமிழுக்கும் கொட்டிக் கொடுக்கிறார்கள் —

இங்ஙனம் தங்கள் அன்புள்ள கழகத் தலைவர்.

பேச்சு முடிந்தது. நடுங்கும் நெஞ்சம், நாலேகால் ரூபாயை எடுத்துக்கொண்டு தள்ளாடி நடந்து சென்றது. வெளியில் வண்டிக்காரன், காத்திருந்ததற்கு இரண்டு பணம் பிடுங்கிக்

கொண்டு போனான். அவன் நல்லவன்.

புலவர் எட்டாந்தேதி வரைக்கும் கழகத்திற்கு வரவில்லை. எட்டாந்தேதி மாலை, புலவர் இனித் தமிழ்க் கழகத்துக்கு மட்டுமின்றி எந்தக் கழகத்துக்கும் வரமுடியாது என்று தமிழ்க் கழகத்தார் கேள்விப் பட்டார்கள்.

தமிழ்க் கழகத்தினர், உலக மக்கள் நிறைந்த பெருங்கழகத்திலிருந்து வேறு புலவரைத் தேடுகின்றார்கள். அவர்கள் உணர்ச்சியுள்ள இளைஞர்கள், தமிழ்ப் பற்றுள்ள இளைஞர்கள்.



இயற்கை எருவா? செயற்கை எருவா?

— பி. கோதண்டராமன் M. A., B. L.,

நமது நாட்டில் விவசாய விளைவு மற்றெல்லா நாடுகளையும்விடக் குறைவாயிருக்கிறது என்பது வெளிப்படை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. நம்முடைய குடியானவர்கள் நிலத்தின் செழுமையைப் போதியவளவு பாதுகாப்பதில் சிரத்தை காட்டாமலிருப்பது அவற்றுள் ஒன்று. இவ்விஷயத்தைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

நமது நாட்டில் பயிர்கள் செழிப்பாக வளர்வதற்கு உதவியாயிருக்கும் பூசாரங்கள் மூன்று: முதலாவது நைட்ரோஜன் எனப்படும் தழைச் சத்து; இரண்டாவது பாஸ்பரஸ் எனப்படும் தானிய சத்து; மூன்றாவது பொட்டாஷ் என்னும் காரம். பயிர்கள் தம் வளர்ச்சிக்குத் தேவையான இவ்வுணவுகளைப் பெரும்பாலும் பூமியிலிருந்தே கிரகித்துக்கொள்கின்றன. ஆனால், இவை நிலத்தில் குறைவாக இருக்கின்றன. அன்றியும், நாம் பயிரிடும் ஒவ்வொரு தடவையும், பயிர்கள் இப் பூசாரங்களை நிலத்தினின்று உறிஞ்சிவிடுகின்றன. ஒரு நிலம் இயல்பாகவே எவ்வளவு தான் செழிப்புடையதாயினும், அதில் வருடாவருடம் பயிரிட்டுச் சாகுபடி செய்துவந்தால், நாளடைவில் அதன் வளமும் விளைவும் குன்றிவிடுவது இயல்பேயன்றோ? ஆதலால், நிலத்திற்கு ஏற்படும் இந் நஷ்டத்தை அறுவடையானதும் ஈடுசெய்துவிடவேண்டும். நிலத்தின் இலல்புக்கும் பயிரின் தன்மைக்கும் உரிய எருவு இடவேண்டும். வேளாண்மைக்குரிய இப்பிரதான விதியை எந்த அறிவுள்ள விவசாயியும் அசட்டைசெய்யமாட்டான்.

இதோடு தொடர்புடைய மற்றொரு விஷயத்தையும் இங்கு கவனிக்க வேண்டும். ஒவ்வொரு பயிரும் நிலத்திலிருந்து தன் பூசாரத்தைக் கிரகிக்கும்போது, ஒரு குறித்த பூசாரத்தையே மற்றெல்லாவற்றையும்விட அதிகமாகக் கிரகிக்கின்றது. ஆதலால், ஒரேவிதமான பயிரை ஆண்டுதோறும் அடுத்தடுத்துப் பயிரிட்டால், நிலத்திலுள்ள அக் குறித்த பூசாரம்

மேன்மேலும் குறைந்து கொண்டே வந்து, உற்பத்தியும் மெல்ல மெல்லக் குன்றுகின்றது. இதைத் தவிர்க்கப் பலவிதமான பயிர்களை மாற்றி மாற்றிப் பயிர்செய்வதுதான் நல்ல விவசாயமுறையாகும். ஒரு குறித்த பயிருக்குப்பின் மற்றொருவகைப் பயிரைப் பயிர்செய்தால், பின் சொன்னது முன்சென்ற பயிர் கிரகித்த பூசாரத்தைக் கிரகிக்காது. அப்போது அந்த நிலமானது தான் இழந்த பூசாரத்தை மெல்ல மெல்லத் திரும்பப் பெற்றுவிடும். இம்முறையால் நிலத்தின் பூசாரம் பாதுகாக்கப்படுகின்றது. இரண்டாவதாக, இம்முறையினுல், அந்தந்தப் பயிர்களுக்கு வேண்டிய உணவு விடுவிக்கப்பட்டு அவைகளுக்குக் கிடைக்குமாறு செய்யப்படுகின்றது. உதாரணமாக, நெல் அறுவடையானவுடனேயோ, அல்லது அறுவடையின்போதோ, நிலத்தில் பயறு அல்லது மாட்டுத் தீவனப் பயிர் ஒன்றை விதைத்துவிட்டால், அப்பயிரின் தழைகள் உதிர்ந்து அடுத்துவரும் நெற்பயிருக்குத் தேவையான தழைச் சத்தை அளித்துவிடுகின்றன.

நல்ல வேளாண்மைக்குரிய இப்பிரதான விதிகளை நம்முடைய குடியானவன் ஓரளவு அறிந்திருந்தும், பல காரணங்களினுல் அசட்டை செய்துவிடுகிருன். அவன், பூசாரத்தைப் பெரிதும் உறிஞ்சிவிடும் கோதுமை, பருத்தி, மணிலா ஆகிய கனப் பயிர்கள் அறுவடையானபின் நிலத்திற்கேற்படும் நஷ்டத்தை ஈடுசெய்வதில் போதியவளவு கவனஞ்செலுத்துவதில்லை. அன்றியும், நிலத்தில் அடுத்தடுத்து ஒரேவிதப் பயிரைப் பயிரிடுவதைவிடப் பலவகைப் பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிடுவதே சாலவும் சிறந்ததென்னும் விதியைப் பலவிடங்களில் பயிலுவதில்லை. இவற்றின் காரணமாக நிலத்தின் செழுமையும் விளைவும் குன்றிவிடுகின்றன.

சமீபகால நிகழ்ச்சிகளின் பயனுக, இப்போது நம்முடைய குடியானவர்கள் நிலத்திற்கு எருவிட வேண்டிய தன் அவசியத்தை ஓரளவு உணர்ந்து வருகின்றனர். அரசாங்கத்தாரும் விவசாய விளைவு அதிகரிப்பதற்கு இன்றியமையாத எருவு விஷயத்தில் விசேஷ அக்கறை காட்டி வருகின்றனர். ஆனல் இப்போது எருவு விஷயத்தில் மற்றொரு பிரச்னை கிளம்பியிருக்கிறது. நிலத்திற்குரிய சிறந்த எரு யாது? அது இயற்கை எருவா? செயற்கை எருவா? — என்பதே அப்பிரச்னை. முதலில் இயற்கை எருவைப்பற்றியும் செயற்கை எருவைப் பற்றியும் ஒரு சிறிது அறிந்துகொள்வோம்.

குடியானவனின் பண்ணையில் தாவரங்களிலிருந்தும், கால்நடைகளிலிருந்தும் மக்களின் மலஜலங்களிலிருந்தும் கிடைக்கப்பெறும் எருவே இயற்கை எருவு. இதை இந்திரிய சத்துள்ள எருவென்றுங் கூறுவர். நமது விவசாயப் பண்ணையில் அகப்படும் சாணம் மிகச் சிறந்த எருவாகும். அதில் நிலத்திற்குரிய சற்றேறக்குறைய எல்லா சத்துக்களும் உள்ளன. கால்நடைகளின் சிறுநீரும் சிறந்த எருவாகும். சாணத்தைவிட அதில் நைட்ரோஜன் சத்து அதிகமாயிருப்பதாகக் கண்டுபிடித்துள்ளனர். ஆயினும், விஞ்ஞான அறிவு சிறிது மற்ற குடி

யானவன் இவ்வெருக்களைப் பாதுகாத்து வைக்கத் தெரியாமல் வீணுக்குகிருன். சாணத்தை முட்டையாகத் தட்டி எரிக்கிருன். அல்லது வெளியிடங்களில் கொட்டிவைத்து அதன் சத்துப் போய்விடும்படிச் செய்கிருன். சாணத்தைத் திரட்டி குழியில் தோண்டிப் புதைத்து மூடிவைத்து ஆறு மாதத்திற்குப்பின் திறந்து எடுத்தால், பதமான எருவாகும் என்பதை அறியான். வீட்டுக் குப்பை, சாம்பல் முதலியவையும், தோட்டக் குப்பை, உலர்ந்த தழை முதலியவையும் நல்ல எருவாகக் கூடியன. ஆனுல், சாணத்தைப்போலவே அவற்றையும் குழியில் போட்டு மக்கவைத்துப் பின்னர் உபயோகிக்கவேண்டும். மக்கள் கழியும் மலஜலத்திலும் நைட்ரோஜன் சத்துள்ளது. இவற்றை முனிசிபாலிட்டிகள் சேகரித்துக் குழியில் போட்டு மூடி சிறந்த எருவாக்கலாம். ஆனுல், இவற்றைச் சரியாகப் பக்குவப்படுத்தத் தெரியாமல் வீணுக்குகிருேம். எண்ணெய் விதைகளிலிருந்து எண்ணெய் எடுத்தபின் உள்ள புண்ணுக்கில் நல்ல எருச்சத்து உள்ளது. ஆனுல் எண்ணெய் விதைகளை அப்படியே ஏற்றுமதி செய்வதன்மூலம், அவ்வளவு புண்ணுக்கையும் இழந்துவிடுகிருேம். எலும்பில் பாஸ்பேட் எரு உள்ளது. அதையும் நாம் சரியாகப் பாதுகாப்பதில்லை. போதிய எருவின்றி நமது விவசாயம் சீரழிகின்றது. ஆயினும், நம்மிடமுள்ள சிறந்த எருக்களைச் சேமித்துப் பதம்செய்யத் தெரியாமல் அவற்றை வீணுக்குகிருேம். இத்தகைய எருக்களில் குணபம், அல்லது மடிசல் என்று கூறப்படும் சத்துள்ளது. இந்தச் சத்து நிலத்திற்குக் கிடைத்துவந்தால், நிலத்தின் வளம் என்றென்றும் குன்ருது. இச்சத்தே பயிர்களுக்கு ஆரோக்கியம் தருவது; தழைகளுக்குத் தளதளப்பும் மேனியும் தருவது. இச்சத்திலிருந்து உண்டாகும் பூச்சிகளும், புழுக்களும், சிறு கிருமிகளும் பயிரின் வளர்ச்சிக்குக்குப் பேருழியம் புரிகின்றன. இவை காற்றிலிருந்து வளர்ச்சிக்குரிய பல சத்துக்களைக் கிரகித்து பயிர்களின் வேருக்கு ஊட்டுகின்றன. இவை கெட்டியாயுள்ள பூமியைத் தளர்த்தி வேர் நன்கு பரவவும், காற்று, ஒளி முதலிய உயிரளிக்கும் பொருள்கள் அதன்மீது பட்டு அதன் வளர்ச்சிக்கு உதவவும் பெரிதும் பயன்படுகின்றன. இயற்கை எருவிலுள்ள இம் மடிசல் சத்தே இச் சிற்றுயிர்களை வளர்க்கவல்லன.

மக்களின் அசிரத்தையினுல், இவ் இயற்கை எருவு பலவிதமாக வீணுக்கப்படுவதால், விஞ்ஞானிகள் சில செயற்கை எருக்களைக் கண்டுபிடித்துள்ளனர். அமோனியம் சல்பேட், பாஸ்பேட், பொட்டாஷியம் முதலியன இச்செயற்கை எருவுகள். இவ்வுப்புக்கள் சுரங்கங்களில் அகப்படுகின்றன. ஆனுல், போதியவளவு கிடைக்காததால், இயந்திர சாதனங்களைக் கொண்டு காற்றிலிருந்து செயற்கையாக உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலை நாடுகளில் இந்த ரசாயன எருக்களையே பெருவாரியாக உபயோகித்து வருகின்றனர். இவற்றைப் பெருவாரியாக விளம்பரம் செய்து விற்றுவருகின்றனர். இச்

செயற்கை உரங்கள் விளைவை அதிகரித்துவருவது வெள்ளிடைமலை. நம்முடைய நாட்டிலும் இவற்றின் உபயோகம் பரவிவருகின்றது. இவற்றைச் சில ஆண்டுகளாக உபயோகித்துவரும் நிலச் சுவான்தார்கள் இவற்றிலிருந்து விளைவு அதிகரித்திருக்கிறது என்றே கூறுகின்றனர். அரசாங்கத்தாரும் உணவு உற்பத்தியை அதிகரிக்க இச் செயற்கை எருக்களை பெருவாரியாக உற்பத்தி செய்து வழங்க ஆலைகள் அமைக்க எற்பாடு செய்து வருகின்றனர். இயற்கை எருவைச் சேகரித்துக் குழியில் போட்டு வைப்பது சிரமமான காரியமானதால், சுலபமாகவும் சிறு அளவிலும் கிடைக்கக்கூடிய இந்த ரசாயன எருவையே உபயோகிக்கலாமென்னும் எண்ணம் பரவிவருகின்றது.

ஆனால், ஹோவர்டு போன்ற பிரபல ஆராய்ச்சியாளர் சிலர் இவ்விஷயமாக எச்சரிக்கை செய்துள்ளனர். அவர்கள், செயற்கை எருவு உடனடியாகப் பயனளித்தாலும், பூசாரத்தை உறிஞ்சிவிடுவதால், சில ஆண்டுகளுக்குப்பின் நிலத்தின் வளம் குன்றிவிடுமென்றும், விவசாயத்திற்குப் பேருழியம் புரிந்துவரும் மண்ணில்வாழ் சிற்றுயிர்கள் இச்செயற்கை எருவால் மடிந்துபோகின்றன வென்றும், பொதுவாக, இச் செயற்கை எருவின் பிரயோகத்தால் பயிர்கள் ஆரோக்கியம் குன்றி பல நோய்களுக்கு ஆளாகின்றனவென்றும் பயிர்களை அழிக்கும்படியான பூச்சிப்புழுக்களின் தாக்குதலுக்கு இந்த எருவு இடமளிக்கிறதென்றும் எச்சரிக்கை செய்கின்றனர். விவசாய ஆராய்ச்சியில் பலகாலமாக ஈடுபட்டுள்ள இவர்களின் அபிப்பிராயங்களைப் புறக்கணிப்பதற்கில்லை. அன்றியும், நம்முடைய பண்ணைகளிலும் தோட்டங்களிலும் வீடுகளிலும் எளிதில் கிடைக்கும் இயற்கை எருவை விட்டுவிட்டு அதிக செலவில் ஐயப்பாட்டிற் கிடமான ரசாயன எருவை வாங்கி உபயோகிப்பதில் சற்று உஷாராகவே இருக்கவேண்டும். ஆயினும், செயற்கை எருவை அடியோடு புறக்கணிப்பதற்கும் இல்லை. துரிதமாகப் பலன் கிடைக்க வேண்டுமென்றால் செயற்கை எருவை உபயோகித்தாக வேண்டியிருக்கிறது. இந்த நிலையில், நம்மில் சிலர், நமது நாட்டில் இயற்கை எருவையே பெருவாரியாக உபயோகிக்க வேண்டுமென்றும் போதாக்குறைக்கு மட்டுமே செயற்கை எருவை உபயோகிக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். இக் கூற்று பொருத்தமாயிருக்கிறது. ஆதலால் இவ்வழியையே நாம் குடியானவர்களுக்குச் சிபார்சு செய்வோம்.

நம்முடைய குடியானவர்களில் அறிவும், திறனும் அனுபவமும் உடையவர்கள் எருப் பிரச்னைகளைப் பற்றி தம் அனுபவங்களை வெளிப்படையாகக் கூற முன்வரவேண்டும். அவர்கள் செயற்கை எருவைப் பெருவாரியாக உபயோகிப்பதில் பல சங்கடங்கள் எற்படுகின்றன எனக் கண்டால், உடனே அதைத் தயங்காமல் வெளிப்படுத்தி மற்றவர்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டும். இந்திய அரசாங்கத்தார் தம் நேர்பார்வையில் செயற்கை எருவு செய்ய விடுகின்றனர். கொஞ்சகாலத்திற்குப்பின் அத்

தொழிலை தனி முதலாளிகளிடம் ஒப்படைக்கப் போவதாகவும் கூறுகின்றனர். அவ்விதம் தொழில் அவர்களிடம் சென்றால் தங்கள் தொழிலைப் பரப்ப ரசாயன எருவே சிறந்ததெனப் பலமாகப் பிரசாரஞ் செய்வர். தற்காலிகமாக ரசாயன எருவால் உற்பத்தி பன்மடங்கு பெருகுவதை எடுத்துக் காட்டுவர். ஆனால், பல வாண்டுகளுக்குப்பின் நிலத்தின் கதி என்னவாகும் என்பதைப்பற்றி அவர்களுக்கு அக்கறையிராது. ஆதலால், நிலத்தின் செழுமையை - நிரந்தரமாகப் பாதுகாக்க விரும்புவோர் இத்தகைய பிரசாரங்களினால் மயங்காமல் தங்களுடைய உண்மையான நலன்களை யுணர்ந்து அவற்றின் வழி நிற்க வேண்டும்.

அடுத்த இதழில் தொடங்கும்.

தஞ்சாவூர்,
செயின்ட் அன்டோனி உயர்நிலைப்பள்ளி,
தமிழ்ப் பண்டிதர்
திருவாளர். S. முத்துக்குமரன்
அவர்கள் கூறிய

வாழ்த்து.

இம் மாசி முழுமதி நாளன்று 'வெண்ணிலா' உதித்து வெளிவரல்கண்டு தமிழுலகு மகிழ்கின்றது. விண்ணிலங்கு வெண்ணிலா பால் ஒளி கக்கிப் பாரிருள் போக்கும் பண்புடையது. அதுபோல நம் மண்ணில் வந்த 'வெண்ணிலா' மண்ணுளோர் கண்ணிற்கு அணியாய்—கருத்திற்கு எளிதாய்--உளத்திற்கு ஒளியாய்—உணர்விற்கு ஊற்றாய் விளங்குகின்றது. அப்படிப்பட்ட தோற்றம் நம்மவர்க்கும் நாட்டிற்கும் ஏற்றம்தரும். இத்தகைய ஒண்சுடர்கள் ஒன்றல்ல பல உண்டாதல் வேண்டும்.

உலகுக்கு உயிராகிய உழவு, வாழ்ந்தவர் பலரின் வரலாறு, இதய இன்பம் நல்கும் இலக்கியம், தூய அறிவின் சீரிய ஆய்வு முதலிய பல பகுதிகளின்கீழ் 'வெண்ணிலா' பெருவிருந்தாக விளங்குகின்றது. அன்று 'நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே' என எதிர்த்து நின்றார் ஒரு புலவரென்ப. இன்று தமிழாக்கங்கருதி, எதற்கும் அஞ்சாது எதிர்த்து நிற்கவல்ல நம் தமிழ்ப் பெரும் புலவர். **S. சோமசுந்தர பாரதியார்,** M.A B.L, அவர்கள், பிற மொழிகளுக்கின்றித் தமிழுக்கே யுரித்தாகிய பொருளிலக்கணத்தை ஆய்ந்து உணர்த்த இசைந்துள்ளது, அழகுக்கு அணிகலம் அணிவித்தது போலும். ஆக, வெண்ணிலா மிக்க ஒளியுடன் வெளிவரும் என்பது தெளிவுறும் என எண்ணுவன்.

லா மார்செய்யேஸ்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

[பிரஞ்சு மக்களை ஆவேசப்படுத்திவரும் தேசியகீதம், ருழேதலில் பாடிய, லா மார்செய்யேஸ் என்பதாம். அதன் பண்ணும் பயனும், இசைத் துடிப்பும் இணையற்றவை. அக் கீதமே நாஜி யரக்கரை ஒட்டி, இன்று தளவாய் கோல் நான்காம் குடியரசு நாட்டச் சுதந்தர வீரரை ஆவேசப் படுத்தியது. அந்தப் போர்ப்பாட்டின் கருத்து முற்றும் இதில் அடங்கி யுள்ளது.]

காபி ராகம் | திச்ர ஏகதாளம்

பல்லவி

எடுங்கள் ஆயுதங்களை
இசுற்படையைச் சாடுவோம்!
தொடை நடுங்கும் பேடி யார்?
துணிந்த வீரர்முன் செல்வோம்!

ஓச்சுகள்

(ஜம்பைதாளம்)

செல்வோம் சுதேசப் புதல்வர்—நம்
சீர்த்தி பெருகுமிந் நாளே
கொல்பகை இரத்தக் கொடியைத்—தாங்கிக்
கோபங் குமுறிடக் காணீர்!
நல்லற மக்களை வெட்டிப்—படு
நாசஞ்செய் மோசப் பகையை
வெல்வோம்! பெருமிதங் கொள்வோம்—வாரீர்
வேகமாய்ப் போர்க்களஞ் செல்வோம்!

(எடுங்கள்)

அண்டிய கூலிப் படைகள்—நம்மை
ஆளவிதி செய்யலாமோ?
தொண்டடிமைசெய்து நாமும்—தேசத்
துரோகிகள் ஆவது நன்றோ?
பண்டு புகழ்பெற்ற நாட்டர்—இங்கே
பாழ்செய் அரக்கர் நலிய—நம்மைக்
கண்டு நடுங்கக் கொடுங்கோல்—வீரக்
காளைகள் போர்தர வாரீர்!
(எடுங்கள்)

வீரன் ஒருவன் விழுந்தால்—பத்து
வீரர் எழுந்து முன்நிற்பார்;
போரில் இரத்தத்தைச் சிந்தி—முன்னே
போந்த நந்தோழரை எண்ணி
வீறுகொண் டேசமர் செய்வோம்—என்றும்
விடுதலை தந்திடும் சக்தி—அடல்
ஏறுபோல் வாருங்கள் சேர்ந்தே!—நம்
ஏற்றம் பெருகிட நாட்டீர்!
(எடுங்கள்)

நல்லாசி!

வெண்ணிலாவுக்கு நல்வரவாகுக! காகிதப் பஞ்சமென்னும் காரிருளையும் பிளந்துகொண்டு வெண்ணிலா தண்ணமுதம் பொழிவது வியப்பே! நமது புதுவையில் எழுந்த வெண்ணிலா தமிழகமெங்கும் புத்தொளி பரவி நிலவுக!

—சுவாமி சுத்தானந்த பாரதியார்.

எதிர்பாராதது!

தென்றல்

சுந்தரன் நல்ல படிப்பாளி அழகன். நற்குண முடையவன். வயது இருபத்தெட்டு. விவாகம் ஆகி இரண்டு வருடந்தானுகிறது!

அவன் மனைவி அவனுக்கு எந்த வகையிலும் இளைத்தவளல்ல. ஆனல், அழகில் சுந்தரனை மிஞ்சுவாள். பெயரும் பொருத்தமானபெயர்தான். பல பாகத்திலும் அவள்பெயருக்கு அவள் பொருத்தமே! புஷ்பம் அவள் பெயர். அதைச் சொல்லும்போதே ஒரு தனி இன்பமல்லவா தோன்றுகிறது. உயிரோவிய மென்றுசொல். ஆம்! ஆடாதசையாதிருந்தால் அப்படித்தான் நினைக்கக்கூடும்! என்ன மிருதுவானகைகள். கை ஒரு வீணை. அதன் நரம்புகள் அவள் கையில் தெரியும் பச்சை நரம்புகள். பிறைச்சந்திர னிடை. அழகு நடை. ரோஜா மலரில் காணுகிற ஒளி ஜாலங்கள் அதோ அவள் கன்னங்களில். சப்பாத்திப் பழத்தில் காணுகிற சிவப்பு, அதோ அவள் இதழ்களில். குரல், நாதம். பிடிமான்விழி! இப்படியுமா ஒரு பெண்? ஆம்! வயது இருபது. இவ்வளவுதான். இளந்தம்பதிகள் இணைபிரிவதில்லை எந்த நேரமும். வீணையும் நாதமும், போலிருந்தனர். அவர்கள் வாழ்க்கை உன்னதப் பாதையில் ஒய்யாரமாய்ச் சென்றுகொண்டிருந்தது. ஆனல், அவர்கள் அப்படியே என்றுமிருக்கவேண்டும். ஆம்! இருந்தால் அவர்களுக்கிணை அவர்களே!

சுந்தரனுக்கு டாக்டர் வேலன் என்ரெரு நண்பன். பிரம்மச்சரிய விரதம் பூண்டவன். வேலையில் நல்ல பயிற்சியுள்ளவன். டாக்டர் வீடு, சுந்தரன் வீடு என்ற வித்தியாசமில்லை. இரண்டுமொன்று என்றுஞ் சொல்லலாம். டாக்டரை 'அண்ண! அண்ண!' என்று விடமாட்டாள் புஷ்பம்.

ஒருநாள் மாலை. டாக்டர் வேலன் ஏதோ சிந்தனையில் சிக்கிக்கொண்டிருந்தான். ஆழ்ந்த சிந்தனை! ஆம்! எதைப்பற்றி? அவனுக்கு எவ்வளவோ வேலை. அதைப்பற்றி ஏதாவதிருக்குமா? இருக்கலாம்! சிந்தனையிலிருந்தவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல் எழுந்தான். அவன் எழுந்த விசை ஒரே முடுக்கு. ஆமாம்! முடுக்குத்தான். நேரே முகக்கண்ணடியில் போய் முகந்திருத்திக் கொண்டான். வாசனைத்திரவியம். அம்மமயக்கம் வரும்போலிருந்தது. என்ன விசேஷம் என்றைக்குமில்லாக் குதூகலம் இன்றைக்கு டாக்டர் வேலனுக்கு? வெளிச்சென்று பார்ப்பதும் உள்நுழைந்து உடை திருத்திக்கொள்வதுமாக உலவிக்கொண்டிருந்தான். யாருக்காகக் காத்துக் கொண்டிருக்கிருன்?

புஷ்பம் வந்தாள் 'அண்ண!' என்று அழைத்துக்கொண்டே.

வேலன் முகம் மாறுபட்டது. அவள் 'அண்ணு!' என்றழைத்தது வேலனுக்குப் பிடிக்கவில்லையா? எப்போதும் போலத்தானே இப்போது மழைத்தாள்? ஆம்! இன்று மட்டும் அவன் முகம் மாறுபடக் காரணம்? அவன் உள்ளத்தை உணர்வார் யார்?

புஷ்பம்:— அழைத்துவரச் சொன்னீர்களாம். வேலைக்காரன் சொல்லிப் போஞன். என்ன செய்தி அண்ணு? ஏது இன்று ஒரே தடபுடல்? சம்பள உயர்வு ஏற்படப்போகிறது என்றீர்களே, அது ஏதாவது நடந்ததா? அல்லது ஆபத்தான கேஸில் வெற்றியடைந்தீர்களா?

வேலன்:— அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இன்று அதிக வேலையில்லை சீக்கிரம் வந்துவிட்டேன். சுந்தரன் வந்ததும் எல்லோரும் சினிமாவுக்குச் செல்லலாமா? இதைச் சொல்லத்தான் உன்னை வரச்சொன்னேன். இன்னுமொரு சேதியுமுண்டு. நீண்டநாளாசை............ அது நிறைவேறுமா?

புஷ்பம்:— நிறைவேறும். அது என்ன?

வேலன்:— என் எண்ணம் ஈடேறும் என்ற ஆசையால்தான் இக்கோலத்துடனிருக்கிறேன். ஏன் நான் சந்தோஷமாயிருப்பது உனக்குப்பிடிக்கவில்லையா புஷ்பம்?

புஷ்பம்:— இப்போதுதான் எனக்கு அதிகச் சந்தோஷம். எண்ணம் ஈடேறும். கவலைப்படாதீர்.

வேலன்:— நிச்சயமாகவா? ஆ! ஆ! என் எண்ணம் ஈடேற இன்னுமொருவர் உதவியுமல்லவா வேண்டியிருக்கிறது. வீட்டில் யாருமில்லை. வேலையாட்களை அவர்கள் வீட்டிற்கனுப்பிவிட்டேன். இப்போது உன் உதவிதான் வேண்டும். நீண்டநாளாசை. என் உயிர் உன் காதலுக்காக ஊசலாடுகிறது. உடல் உனதழகிற்கு அடிமைப்பட்டு விட்டது. நீ மறுத்தால் உயிர் நில்லாது. இது உண்மை. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுகிறேனே? இல்லை! இல்லை!! காதல் சக்தியால் கடலையுந் தாண்டலாம். அது எனக்குத் தெரியும்.

(காதலா? காமமா? பாபம்! காமத்தால் கண்ணிழந்த வேலனுக்குக் காதல் என்பதென்ன? காமம் என்பதென்ன? என்ற வித்தியாசங்கூடத் தெரியவில்லை.)

புஷ்பம்:— நிறுத்தும்! நிறுத்தும் உமது பேச்சை! இது என்றும் நான் எதிர்பாராதது! கபடன் நீ! நயவஞ்சகன். அறிந்தேன் உனதுள்ளத்தை. நன்ருயறிந்தேன். அண்ணு என்றழைத்ததற்குப் பலனு இது? பழகிய வீட்டிற்குப் பாஷானம் கொடுக்கப் பார்க்கிருய். உண்மை நண்பன்போல் நடித்தாய்.

மின்னுவதெல்லாம் பொன்னுகாதென்பதை மறந்தேன். அதன் பயன்தான் நீ இப்படிப் பேசவும் நான் கேட்கவும் ஆனது. பிறன் மனைவி, தாய், தங்கை. இதை மறந்தாய். ஈனச்செயல் புரியத் துணிந்தாய்

மிருகம். அதுவேநீ. நீதானது. படித்த முட்டாள். உன் தொழிலென்ன? எல்லோருக்கும் இரண்டாந்தந்தையிடத்திலல்லவா நீ இருக்கிறாய்? அடுத்துக் கெடுக்க எத்தனை நாளாய்க் காத்திருந்தாய்? கிட்டாப் பொருளுக்குக் கொட்டாவி விட்டு ஏங்காதே! இதோடு விட்டுவிடு உனது ஆசையை. கண்ணிருந்தும் குருடனை உன்னிடம் பேசியதே தப்பு, என்று புறப்பட்டாள் சரேலென்று வீட்டிற்கு. ஆனால், வேலன் வழி மறித்தான். இடியோசைகேட்ட நாகமெனப் பயந்தாள். அவன் கைகள் தன்னைத் தாவிபிடிக்கத் துடிப்பதையுங்கண்டாள். 'ஐயோ!' என்று கூவினாள். இந்தச் சப்தம் எந்த நேரமும் சர்வ சாதாரணமாய்க் கேட்கும் டாக்டர் வீட்டில். யார் வருவார்? கூவியதும் "ஓகோ" என்று சொல்லிக் கையைப் பிடித்திழுத்தான். ஆவேசங்கொண்டாள். திமிறினாள். தன் கற்புக்குத் தீங்கு வந்துவிட்டதே என்று பயந்தாள். பெண்ணுக் கணிகலம் கற்பு. அதுபரிபோவதென்றால் யார்தான் பொறுத்திருக்க முடியும்? ஓடினாள். எடுத்தாள் கல்வத்தை. வீசினாள். எங்கே? டாக்டர் மதியிழந்த மண்டைக்கு. கண்டாள் குருதியை. 'ஆ' வென்று சாய்ந்தான் வேலன். புஷ்பம் சிட்டெனப் பறந்தாள் வீட்டிற்கு. வேகந்தானென்ன! என்ன பீதி!

உலகம், கொடிய விஷமுடையதை 'நல்லபாம்பு' என்று சொல்லுகிறது. அதுபோல் சுந்தரனும் புஷ்பமும் அற்பனை ஆப்த நண்பன் என்று பழகிவந்தார்கள் போலும்! அதன் விளைவு? நண்பன் மனைவிமீது நாட்டங் கொண்டதுதான்!

அதுசமயம் சிகிச்சைபெற வந்தார் ஒருவர் டாக்டர் வீட்டிற்கு. இந்தக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டுத் திகைத்தார். நின்றார். 'ஐயா! மாடியிலிருந்து தவறிக் கீழே விழுந்துவிட்டேன். அடுத்தவீதி, முதல் வீட்டிலிருக்கும் சுந்தரனையும் புஷ்பத்தையும் அழைத்து வாருங்கள். தயவுசெய்து சீக்கிரம் செல்லுங்கள்' என்றான் வேலன் வந்தவரிடம்.

'புஷ்பம் நீண்டநேரமாகியும் இன்னும் வரவில்லையே! எங்குச் சென்றிருப்பாள்? குழந்தை அழுகிறதே' என்று தனக்குள்ளேயே முணுமுணுத்தான் சுந்தரன். அச்சமயம் வந்தாள் புஷ்பம். 'எங்கே சென்றிருந்தாய்?' என்று கேட்டான் சுந்தரன். டாக்டர் வீட்டிற்குப் போய்வருகிறேன் என்று கூறிக்கொண்டே உள்ளேசென்றாள்.

'என் அலங்கோலமாய்க் காணப்படுகிறாள்? தோற்றம், பீதியடைந்தவளைப்போல் தோன்றுகிறதே. டாக்டர் வீட்டிலா இவ்வளவுநேரம்......?' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் சுந்தரன்.

'சார்! டாக்டர் அபாயநிலையிலிருக்கிறார். உங்களை அழைத்துவரச் சொன்னார். மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டார்' என்றார் வந்தவர்.

'ஆ! புஷ்பம்! புறப்படு. வேலன் அபாய நிலையிலிருக்கிறானாம். மாடியி

லிருந்து கீழே விழுந்துவிட்டானாம்' என்று சொல்லிப் பதறினான் சுந்தரன்.

—நீங்களே போய் வாருங்கள். வேலையிருக்கிறது எனக்கு.

—சமயாசந்தர்ப்பம் தெரியவில்லை உனக்கு. புறப்படு. வேலை பெரிதல்ல.

புறப்பட்டுப்போனார்கள் இருவரும்

"சில விஷயம் பேசவேண்டும். உங்களை அழைத்து வந்தவரை வெளியில் போகச் சொல்லுங்கள். தெருக் கதவைத் தாளிடுங்கள் (சிறிது நேரம் மௌனம்) என்னருகே வாருங்கள். நான் இறப்பதற்கு அஞ்சவில்லை. ஆனால், சொல்ல வேண்டியதைச் சொல்வதற்குமுன் இறந்துவிடுவேனோ என்று பயமாயிருக்கிறது. சுந்தரா! மன்னிப்பு...வணக்கமாய்க்... கேட்டுக் கொள்ளுகிறேன்...இறப்பதற்குமுன்... 'சுந்தரா...அடைய... ஆசிக்கிறேன்......மன்னிப்பு. நான் செய்த...குற்றத்திற்காக... நான்... உனக்குத்...தெரியாமல்...செய்த... குற்றத்திற்காக... இதனால்... உனக்குக் கொடுக்கப்போகும்... துயரத்திற்காக...... மன்னிப்பு' என்றான் வேலன். பேச்சு நின்றது. இறந்துவிட்டானா? இல்லை! இல்லை!! இன்னுமவனுக்கு ஓராவிதானிருக்கிறது.

சுந்தரா!...... உன்னுடைய ...... மனைவி...... மண்டியிட்டு இருக்கிறாள்...உன் முன்பாக...அதேபோல் ...நானும்...மண்டியிட ஆசிக்கிறேன் ... உன் மனைவிக்கு ... மன்னிப்புக் கொடு... கடைசி காலம்...கிட்டிவிட்டது...எனக்கு... என்னையும்... மன்னிப்பாய்... எனது... கடைசி... வேண்டுகோள். ... புஷ்பத்தின் ... புஷ்பத்தின் ஆசை நாயகனாக ... இருந்த...குற்றத்திற்காகமன்னிப்பு!' என்றான் வேலன். அதற்குமேல் பேச்சில்லை. இன்னுமெதற்குப் பேச்சு? கீழ்மையான ஆத்மா பயங்கரமானக் குற்றத்தைச் சாட்டியது.

(அடுத்த இதழில் முடியும்)

விஞ்ஞானமா?

—த. இரிசப்பன்.

பண்டைத் தமிழனின் பான்மை தான் என்னே! எல்லாக் கலையிலும் வல்லவனானான். யாவும் அறிந்தான். அறிந்த கலையை எங்கும் பரப்பினான். உலகத்திலுள்ள உயிர்கள் எவைக்கும் உடல்வளமும் உயிர்வளமும் ஒருங்கே அளித்து, வானில் உலவிவரும் செங்கதிரோன் செயல், தன்னொளி பெறாது, தண்ணொளி யளிக்கும் வெண்கதிரோன் தன்மை, விண்ணெங்கும் மினுக்கும் மீன்களின் மாண்பு, முதலிய யாவும் அவன் அறிந்ததே. உடற்கூற்றின் நுண்ணிய ஒவ்வொரு ஆராய்ச்சியும், உடலியல் நூலின் ஒப்பற்ற பயனும் அவனறிவிற் பொலிந்தன. பூதநூல், வேதிநூல், வேளாண்மை முதலியவை அவனறிவிற்கப்பாற் பட்டவையல்ல. பரந்த அறிவும் சிறந்த செல்வமும் உடையவனாகி, அவ்விரு பேறுகளையும் விருத்திசெய்ய விரும்பி அலைகடலைத்தாண்டி எங்குஞ்சென்றான்; வாணிபம் இயற்றினான்; சென்ற அவ்விடங்களில் போர்வீரன் எனப் போற்றப்பட்டான் – நியாயம் கற்பிப்பதிலும் வல்லவன்; நீதி செலுத்துவதிலும் வல்லவன். ஆணை பிறப்பிப்பதிலும் வீரன்; அன்பின் வரய்ப்பட்டும் ஆணைதவறாது நடப்பதிலும் வீரன். தமிழ் நாட்டை உறைவிடமாகக் கொண்டு தனிச் செங்கோல் செலுத்தினான். தமிழ் நாட்டில் வாழ்ந்தான். "தமிழ்" என்னும் தன் தனி மொழியைப் போற்றினான்; புலமை வாய்ந்தான், புன்னெறி துறந்தான்; நன்னெறியறிந்து நலத்தைப் பேணினான். எத்துறையிலுமே ஏற்றம் பெற்றான்.

இற்றைத் தமிழனின் இயல்பைப் பாரும். அவன் மலைமீதிருந்தான், இவன் மடுவில் கிடக்கிறான். அவன் சிறந்து விளங்கினான்; இவன் சிறப்பற்று நலிகிறான். கலை, என்பது இவனுக்கு கலிகாலக் கூத்து, அல்ல அல்ல, கலிகாலக் கூற்று. உழைப்பில்லை, உய்வுமில்லை. உயிரற்ற விலங்கெனவே உலவி வருகிறான். அறிவற்றான். ஆண்மையுமற்றான். சிறப்பற்றான், செல்வமுமற்றான். ஞானம் என்று சொல்லித் தானும் தானம் விட்டும் போகான். தன்மொழி யறியான். அறிந்தோரைப் பேணான். பிறனுக்கு அடிமைப்பட்டு வாழ்தலையே சிறப்பென சிரமேற்கொண்டான். சுருங்கச் சொல்லில் அறிவு குலைந்து, அடிமையாகி, சோம்பனெனவே தேம்பித் திரிகிறான்.

அத்துணை சிறப்பிலிருந்த தமிழன் இத்துணை நிலைக்கு வந்ததேன்? காலந்தான் காரணமாயிற்றா? இவனால் விளைந்ததா, பிறனால் விளைந்ததா?

சற்று ஆராய்வோம். தினை விதைத் தவன் தினைதான் அறுப்பான். அவன் செய்த வினையின் பயனை அவன்தானே அனுபவிக்கவேண்டும்.

ஒருவன் பாடுபட்டுப் பணம் தேடு கிறான். அதைக் காக்க வழி யறியா னாயின் அப்பணம் அவன் கையில் நிற்குமா? அதனாலாகிய பயனைத் தான் அடைய முடியுமா? முடியா தல்லவா. அதுபோலவே, மிகுந்த பயனளிக்கவல்ல மனித தேகத்தைப் பெற்று,அதைக் காக்காமல் இகழ்ந்து நின்றால் உடல் நிற்குமா? பின் உயிர் தான்நிற்குமா?உடல்நோய்வாய்ப்பட்டு துன்பப்படும், மனந்தளர்ந்து, கவலை யும் பெருகும். ஆயுள் குறுகும். நலி யும் உடலை நலமாய்க்காக்க வல்லது விஞ்ஞானமல்லவா? மெய்ஞ்ஞானம் என்று சொல்லி விஞ்ஞானத்தை இகழ்வதா? வாய் ஞானம் மட்டும் பேசி வீண்காலம் போக்கினதன் பய னல்லவா இந்நிலை. பிறநாடெங்கும், பிறதேசமெங்கும், உலக மெங்கும் விஞ்ஞானம் தாண்டவம் புரிகிறது; நம் நாடுமட்டும் எதற்கும் பிறநாட் டின் உதவியையே நாடுகிறது. இதை இப் பஞ்சகாலத்தில் கண்ணாரக் காண்கிறோமல்லவா?

விஞ்ஞானத்தினால் விளையும் நற் பயன் மிகப்பல. சிலவற்றைக் கூறு வோம்.

1) உலகத்தில், கண்ணெதிரிற் றோன்றும் பல நிலைப் பொருட்களை யும் ஆய்ந்தறிந்து, அவைகளினாலான பயனை முடிந்த அளவில் பெற முடி கிறது. கட்புலனாகாத சிற்றுயிர்களை யும் காணமுடிகிறது.

2) உடலின் வெப்ப தட்ப நிலை யறியவும், பருவ காலத்தின் நிலையறி யவும் முடிகிறது.

3) உடலுக்கு, உறு துணையாக போக்குவரவு சாதனங்களும், நீர்ப் பாசன வசதிகளும் பெற்றனர். பொறிகள் ஆக்கினர்; பெரும் பயன் அடைந்தனர்.

4) உடலுக்கு நோய்வராமல் தடுக் கவும், நோய் வந்தக்கால், தக்க மருந் துண்டு விரைவிற் சுகம்பெறவும் தெரிந்தனர்.

5) உணவு, உடை, உறைவிடம் முதலியவைகளை உடல்நிலைக்குத்தக தேர்ந்தெடுத்துத் தருவது எது? விஞ் ஞானமல்லவா?

இயற்கை அன்னையின் சக்திகள் பல. அவற்றைக் கொண்டு நாம் நன் னெறியில் உய்யலாம்.

விஞ்ஞானம் பொய் என்றும் சிலர் கருதுகின்றனர். அது பொய் யாகுமா? மெய் விளக்கந் தருவதும், அறிவு மயக்கத்தை அகற்றுவதும் அதல்லவா! விஞ்ஞானம் பொய் என்றே கொண்டாலும், பொய் தெளிந்தால்தானே மெய் புலப்படும். மெய்யறிய பொய்யும் துணையாகு மல்லவா?

மற்றும் சிலர் விஞ்ஞானமா நலம் தருவது. உலகை நோக்கும்போது, விஞ்ஞானத்தின் விபரீதம் விளங்க வில்லையா? உலகமெங்கும் போரும்

பஞ்சமும் தாண்டவம் ஆடுகின்றன வே. காரணம் விஞ்ஞானமல்லவா? என்று கருதுகின்றனர். — ஆனல், தற்கால உலக நிலைக்குப்பொறுப்பாளி விஞ்ஞானமா அல்லது மனிதனின் மனக்கோளாறுதானு? என்று சற்று யோசித்தால் புரியும்.

இப்படி விஞ்ஞானத்தை இகழ்ந்ததன் பயனுகத் தமிழன் மூடக்கொள்கைகளையும், மூடப் பழக்கங்களையும் பொருளின்றியும் கைக்கொண்டான். சிலவற்றைக் கூறுவோம்.

1) மரணத்திற்குப் பின் ஆன்மா என்னவாகிறதென்பதை அறிவானு யினும், இறந்தவருக்குக் கருமகாரியமும் ஆண்டுதோறும் திதியும், தர்ப்பணமும் செய்து வருகிருன். செய்யத் தவறினல் வந்ததுகேடு என்றெண்ணுகிருன்.

உடல் நோயால் வருந்தும் போது, சுகம்பெற வழியறியாமல், தெய்வத்தை இகழ்வதும் புகழ்வது மாகிருன். கோவிலுக்குச் சென்று காணிக்கை செலுத்துவதிலும், மொட்டை யடித்து ஊரை வலம் வருவதிலும், உடலை வருத்து வதிலும் நோய் தீர்ந்துவிடும் என்று எண்ணி செய்து வருகிருன். பக்தியைப் படாடோபத்தில் சேர்த்தான்.

விஞ்ஞானமா இவற்றிற் கெல்லாம் காரணம் எண்ணுதீர். ஆக்குவதும் விஞ்ஞானம், அழிப்பதும் விஞ்ஞானம் என்றே தோன்றுகிறது.

பொலிவுடன் ஓங்க வேண்டும்!

வெண்ணிலா தன்னைக் கண்டேன்
மிகமிக ஆர்வங் கொண்டேன்
எண்ணிலா கோடி இன்பம்
என்மனந் தன்னிற் கொண்டேன்
நண்ணிய மக்கட் கெல்லாம்
நல்விருந் தாக நின்று
புண்ணிய நாட்டில் என்றும்
பொலிவுடன் ஓங்க வேண்டும்!

—பி. பாப்புராமனுதன்.

ஒரு பழம் பாட்டு.



அவளைப் பின்தொடர்ந்த அவள் மனம்!

—பரிமேலழகன் —

பாலைநிலம் என்பது புல் பூண்டுகூட முளைப்பதற்கு வசதியற்ற மணற்பாங்கான பூமி. அங்கே, நீர் நிலைகளை மருந்துக்குக் கூட காண்பதரிது. தண்ணீர் இருந்து வரண்டுபோய், வெடிப்புவிட்ட பள்ளங்கள், கண்ணுக் கெட்டியவரை பட்டமாத்தைக் கூடப் பார்க்க முடியாது. வானும் மண்ணும் கனலைக்கக்கும். மணலும் உருகிவிடும் படியான வெம்மை வெய்யில் அந்தப் பூமியில் ஆட்சி புரியும். பகலவன் ஒளித்தீயால் தாக்குண்டு பொரிந்துபோன பாறைகள், பசுமையான மாஞ்செடிகள் அந்தப் பிரதேசத்திலே தோன்றலாகா தென்பது இயற்கையிட்ட சாபம் போலும்!

கானல் நீர் என்கிறார்களே- அது பாலைநிலத்தில் தான். தூரத்துப் பார்வைக்குத் தண்ணீர் போல ஒரு உருவெளித் தோற்றம். அதை நம்பி நீர் வேட்கை மிகுந்த மான்கள் ஓடி ஓடி யிளைத்து அயர்வதுண்டு. திக்கெட்டும் வான வளைவைத் தவிர வேறெதையும் காண்பதரிது.

"நானிலம்" என்பது பழய சொல். காரணப் பெயர் என்பர் அச்சொல்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு வகைப் பட்ட நிலங்களே நானிலம் என்ற சொல்லில் அடங்கிய பொருள். பின், பாலைநிலத்தை எந்தப் பகுதியில் சேர்ப்பது என்று ஒரு கேள்வியெழலாம். மிகமிகப் பழயகாலத்தில் (தொல்

காப்பியர் காலத்திற்கும் முன்னர்) 'பாலை' என்று ஒரு தனி நிலம் இருந்ததாகத்தெரியவில்லை.

இன்று உலகத்திலேயே மிகப் பெரியதாக விளங்கும் இமயமலை நெடுங் காலத்திற்கு முன்னர் இல்லை, என்கின்றனர்.

'ஆஸ்டிரேலியா' என்னுங் கண்டம் விண்மீனிலிருந்து பெயர்ந்து விழுந்த துண்டம் என்கின்றனர்.

மனித இனமே முதல் முதல் தோன்றிய குமரிக் கண்டத்தைக் கடல் கொண்டு விட்டது என்கின்றனர்.

இயற்கையில் ஒவ்வொரு கணமும் எவ்வளவோ மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இனியும், இவைகளைப் போலவே எண்ணிறந்த மாறுதல்கள் ஏற்படலாம்.

முல்லைநிலமும், குறிஞ்சி நிலமும் காலச் சூழலில் – இயற்கையின் திருவிளையாடலில்-தத்தமக்குரிய நல்லியல்பை இழந்து புதியதொரு தோற்றங் கொண்டன.

அப்பகுதி முல்லையாகவோ, அன்றிக் குறிஞ்சியாகவோ கூறப்படுவதற் குரிய தன்மை அற்றிருந்தபடியால் அக்காலத்துப் போறிஞர்கள் "பாலை" என்று பெயரிட்டு, நிலத்தை ஐந்துவகையாக்கினார்கள்.

"முல்லையுங் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து ... ...
... ...
பாலை என்பதோர் படிவங் கொள்ளும்"

என்று விதியும் சமைத்தார்கள். அந்தப்பாலைநிலத்தைத்தான் அக்காலத்துக் கவிஞர்கள் 'சுரம்' என்ற சொல்லால் வழங்கினர்.

இப்படிப்பட்ட பிரதேசத்திலே, அக்காலத்து ஆண்தகைகளை அடிக்கடி காணலாம். ஒரு இளைஞன்; அறிவாலும், உருவாலும், தனக்கேற்றவளாகிய ஒருத்தியைக் காதலிக்கிறான். அவளை மணப்பதற்கு எண்ணுகின்றான். தன் முன்னோர் சேமித்துவைத்த செல்வம் ஏராளமாக இருக்கிறது. அப்படி யிருந்தும் அதை அவன் விரும்பவில்லை. தன் முயற்சி யின்றி வந்த அப்பொருளை அவன் உபயோகப் படுத்துவானேயாகில், சோம்பல் வாழ்க்கைக்கு உரமிட்டவனாக அவன் அக்காலத்தவரால் கருதப்படுவான். தம் உழைப்பால் பெற்ற பொருளே அறஞ் செய்தற்கும், இன்ப மனுபவித்தற்கும் ஏற்றதாகும் என்பது அக்காலத்தவர் சித்தாந்தம். தன் முயற்சியால் பொருளீட்டத் தன்

நாட்டை விட்டு நீங்குகிறான். அவன் போகிற வழியில்தான் மேற்சொன்ன பாலைநில மிருக்கின்றது.

பிரிவு ஆற்றாமையால், அவன் அன்பை எண்ணி எண்ணி வருந்துகின்றாள் தலைவி. ஒவ்வொரு நொடிப்பொழுதும் ஒவ்வொரு ஊழியாகக் கழிக்கின்றாள். "என்னை மறந்து விடுவாரோ? கீழ்மகன் அல்லவோ மறப்பான்! அவர் வாய்மையே உருவாகக் கொண்டவராயிற்றே! மேலும், அறிஞரல்லவா?" என்றெல்லாம் பன்னூறு எண்ண அலைகள் அவள் நெஞ்சை அலக்கழிக்கின்றன. அப்போது தலைவன் செல்லும் பாலை நிலத்தின் காட்சி அவள் கண்முன் வருகிறது.

"ஐயோ! எவ்வளவு கொடிய பாலை நிலம்; என் உள்ளம் வெகு தலைப்போலன்றோ. அவர் உடலம் வேகும்; அந்த வேதனையில் அவருக்கு என் நினைவு இருக்குமா? என் மீது அவர் வைத்த அன்பை......என்று தொடங்குகின்றாள்.

ஒரு நிகழ்ச்சி அவள் நினைவிற்கு வருகிறது. ஒரு இளம் பெண் (பிடி) யானை. அதனுடைய ஆண் வலிமைமிக்க மதவேழம். உயிரில் இயற்கையிலேயே தோன்றுகின்ற தெய்வீகக் காதலை உடையவை அவைகள். காதலனாகிய ஆண் யானையிடம், காதலியாகிய பெண் யானை காட்டும் அன்புக்கு உவமை எதைச் சொல்வது? அதைப் போலவே, காதலியிடம் காதலன் காட்டும் அன்பைத் தாயனைய அன்பு என்று சொல்லலாமா? இல்லை, இல்லை. அதைவிட ஒருபடி அதிகமாகவே சொல்ல வேண்டும்.

நம்மால் குறைந்த அறிவுடைய பிராணிகளாகக் கருதப்படும் இவ்யானைகளின், ஒப்பற்ற அன்பு நிகழ்ச்சியொன்றை ஒரு பழம் பாடலில் காண்கின்றோம்.

உருத்திரமூர்த்தியின் நெற்றிக் கண்ணிலிருந்து, வெளிப்படும் தீயைப்போலக் காய்கிறது கடும் வெய்யில். ஆண் யானைக்கு அந்த வெய்யிலின் கொடூரம் நன்கு தெரிகின்றது. என்ன செய்தது தெரியுமா? தனக்காக ஏதாவது வசதி செய்து கொண்டதா? என்ன செய்துகொள்ள முடியும் அந்தக் கொடும் பாலை நிலத்தில்? வெயிலால் தீய்ந்து உலர்ந்த பழய உரு தெரியாத மரங்கள் எங்கேயோ ஒன்று அரை அடி உயரம் நிற்கின்றது. கடுகத்தனை நிழலுக்கும் வழியில்லை. இவைகளை யெல்லாம் ஊகித்தது அந்த ஆண்யானை.

தனது காதல் மடப் பிடிக்கு வெயில் படாமலிருந்தால் போதும் என்று எண்ணுகிறது. தன் துதிக்கையால் வெயிலை மறைத்துத் தன் காதலிக்குக்களிப்பூட்டுகிறது. எவ்வளவு தன்னலமற்ற தன்மை! எவ்வளவு உயரிய அன்பு! இயற்கையில் எழுந்த காதலின் சக்திதான் என்னே! துதிக்கையால் மறைத்து எவ்வளவு வெயிலைப் போக்கமுடியும்? அளவு கடந்த அன்பு வெறியில் எழுந்த நிகழ்ச்சியின் பெருமை தான் என்னே!

"அந்தப் பாலை நிலத்தில் தானே அவரும் போவார். இந்த நிகழ்ச்சியையும் பார்ப்பார் அல்லவா? அப்போதாவது அவருடைய காதலியைப்பற்றி ஒரு கணம் எண்ணுவாரா? ... இந்த நிகழ்ச்சி அவருக்கு என்மீதுள்ள அன்பைக் கட்டாயம் நினைவூட்டும்." என்றெல்லாம் எண்ணுகின்றாள்.

"கனலுமிழும் கொடும் பாலையில் செல்லும் அவரை என்மனமும் பின் தொடர்ந்து விட்டது"— என்று, தன் மன நிலைமையைக் கூறி உண்மைக் கற்பரசியின் இலக்கணத்துக்கு இலக்கியம் வகுக்கின்றாள். தலைவனைவிட ஆயிரம் பங்கு அதிகமாக அவதியடையும் தலைவியின் நிலைமையைப் பழய கவிஞர், தம் சொல்லோவியத்தில் சிகரமாக அமைத்திருப்பது தமிழ் நய மறிந்தார்க்குப் பெரு விருந்தாகும்.

இனித் தலைவியின் வாசகத்தைக் கவிஞரின் சொல்லாட்சியில் கண்டு மகிழ்வோம்:—

"மடப்பிடியை மதவேழம்
தடக்கையான் வெயின் மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனே காண்"

பாலர் பகுதி

தந்தையின் தனிப்பற்று.

"சாந்தன்"

குகன் ஒரு வேடன். அவனுடைய துப்பாக்கி எத்தனையோ உயிர்களை மாய்த்துவிட்டது. மாய்க்கப்போகிறது. அவனுடைய நாயின் பெயர் கோப். சீன மொழியில் கோப் என்றால் புலி என்று பொருள். அப்பொருளுக்கேற்ப அது எந்த உயிரைக்கொல்லுவதாயினும் புலிப் பாய்ச்சலாகத்தான் பாய்ந்து கொல்லும். அவ்வளவு வன்மையுடையது! அது இதுவரை கொன்ற உயிர்கள் தாம் எத்தனை! அதற்குக் கணக்கே இல்லை. பொதுவில் கோப், குகனின் ஒரு தோளுக்குச்சமம் என்றால் அதன் பெருமையை நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். குகன் வேட்டைக்குச் செல்லும்போதெல்லாம் கோப்பையும் உடன் கூட்டிச்செல்வான். இது அவன் பழக்கம்.

அன்று ஒருநாள் வேட்டை முடிந்தது. வீட்டிற்குத் திரும்பினான் குகன் அவன் பின்னேவர கோப் முன்னால் வந்துகொண்டிருந்தது. அப்போது ஆடி மாதம். காற்று அலக்கழித்தது மரங்களை. அவைகளிலிருந்து இலைச்சருகள் விழுந்தவண்ணமிருந்தன. ஓர் ஆலமரத்தில் கோலப்பறவை மரங்கொத்திக்கூடு ஒன்று இருந்தது. அக்கூட்டிலிருந்த ஒரு குஞ்சுகூட அக்காற்றிற்கு இலக்காகி கூட்டினின்றும் தட்டுத்தடுமாறித் தரையில் வீழ்ந்துவிட்டது. பாவம் தரையிலே கிடக்கும் சருகோடு சருகாய் அக்குஞ்சும் கலந்துகொண்டது. கலப்பினும் அதன் அழகிய நீண்ட கரிய அலகும், வெண்ணிற வரிக்கோடமைந்த கவின் சிறகும், செம்மண் நிறக்கழுத்தும் உடலும்தாம் அதைச்சருகினின்றும் வேறு பிரித்துக்காட்டுவன. நல்லவேளை அக்கணம் அங்கே வேறு விலங்கினங்கள் ஒன்றுமில்லை. இருந்திருந்தால் அக்குஞ்சு இந்நேரம்வரை தரையில் கிடந்தவாறு வாயையும் சிறகையும் ஆட்டி அசைக்காது. உடனே அது எதற்காவது இரையாகியிருக்கும்.

உம். இப்போதுதான் என்ன? அதன் கதி எப்படி முடிகிறது பார்ப்போம். ஐயோ அக்குஞ்சு குகன் வரும் வழியில் அல்லவா கிடக்கிறது! அப்படியானால் கோப் அதைச் சும்மா விட்டு விடுமா? ஆயிற்று. கோப்பும் அதோ வந்து விட்டது. என்னே உலகம்! இன்னும் சற்று நேரத்தில் அது கோப்பின் கொடிய பற்களில் நற நற வென்று கடிபடப் போகிறது. எங்கே கோப்? அதோ வெற்றியோடு சொந்த நாடு திரும்பும் ஓர் போர் வீரனைப் போல குஞ்சின் அருகில் வந்து விட்டது!

தரையில் அனாதையாய் கிடப்பது ஓர் பறவையின் குஞ்சு. அதனால் தான் அதைப் பரிந்தெடுத்துக் காப்பாற்றுவார் அங்கு எவரும் இல்லாமற் போயினர். அதுவோர் பச்சிளங் குழந்தையாகவோ அல்லது ஓர் பாவை, இளங் கன்னியாகவோ, இருந்திருந்தால் இம்மாதிரி ஆபத்துக்காலத்தில் கேட்கவா வேண்டும் காப்பாற்ற. அதுவோர் பறவையாக அல்லவா போய்விட்டது. படபட வென்று சிறகடித்து உல்லாசமாய் உயரப்பறக்கும் இனத்தில் பிறந்தும் அது தனது, குழவிப்பருவத்தால் ஓர் முழங்கூட உயரப் பறக்கவோ அன்றி பக்கத்துப் புதர்களுக்குத் தப்பித்துச்சென்று மறைந்துகொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ முடியாமல் அங்கேயே கிடந்தது. இந்நிலையில் கோப் எப்படியோ இதைப் பார்த்துவிட்டது உடனே அதைத் தனக்கு இரையாக்கிக் கொள்ள மெல்லமெல்ல நடந்து குஞ்சின்மேல் பாயக் குறிபார்த்தது. பாயவும்போயிற்று. போனதுதான் தாமதம். பந்துபோல் மேலே மரத்திலிருந்து ஏதோவொன்று அதன் வாய்ப்புறம் "தொப்" என்று வந்துவீழ்ந்தது. அக்கணம் கோப்பிற்கு வீரத்தனமாய் எளிதில் எதிரியைக் கொல்லக்கூடிய பலமிருந்தும் அது பெருமிரட்சிகொண்டு உடல் நடுங்க, சிறிது பின்வாங்கி வந்து வீழ்ந்த பொருளைக்கவனித்தது. ஆனால், வீழ்ந்த பொருளோ அடுத்த விநாடியிலேயே ஒரு பெரிய மரங்கொத்திப் பறவையாய் உருவெடுத்தது. தன் நீண்ட ஆணி போன்ற கூர்மையான அலகையே துப்பாக்கி முனையென எண்ணி, தன் சீரிய சிறகை விரித்துக்கொண்டு தன்னை மறந்த நிலையில் வெகு கோபத்துடன் கோப்பிடம் போர்புரியப்போயிற்று. அக்கணம் அப்பெரிய மரங்கொத்திக்குள்ள வலிமை கடலைக்காட்டிலும் மிகப்பெரியதாய்க் காணப்பட்டது. எதிர்பாராத வகையில் எதிரி உண்டானதால் அது சிறிதோ பெரிதோ, வலியற்றதோ, உற்றதோ, அதெல்லாம் யோசிக்க நேரமின்மையால், கோப்பின் வலிமை மரங்கொத்தியின் வலிமைக்குப் பின்னிட்டு விட்டது. பின்வாங்கி அப்பெரிய பறவையை விழுங்க எண்ணிக் கோரப்பார்வையுடன் குறி பார்த்து நின்றது கோப். ஆனால் அப்பெரிய பறவையின் வலிய உள்ளத்திலிருந்து கண்வழியே வழிந்து கொண்டிருந்த தீப்பார்வைக்குப்பயந்து பிறகும் தன்னைப்பின்வாங்கிக் கொண்டது. இச்செயல்களைத் தூரத்தில்நின்று கவனித்துக் கொண்டிருந்த குகன் வெட்கத்தினால் கோப்! கோப்! கோப்! என்றான். கோப் அவனிடம் சென்றது. அழைத்துக்கொண்டு சென்று விட்டான்.

குழந்தைகளே! பெரிய மரங்கொத்திக்கும் தரையில் வீழ்ந்திருந்த சிறு குஞ்சுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்களா? பெரிய பறவை குஞ்சுக்குத் தந்தை. அது எவ்வளவு பெரிய கொடியவிலங்கை எதிர்த்துப் போர்செய்தது என்பதைக் கவனித்தீர்களா? அதற்கு அவ்வளவு பெரிய வலிமை எங்கிருந்து வந்தது? அந்த வலிமை எதனுல் ஏற்பட்டது? அன்பினுல் அதாவது தன் குஞ்சின்பால் உள்ள பற்றுதலால். அதுதான் தனிப்பற்று. ஒப்பற்ற அன்பு. இப்படித்தான் சிறுவராகிய உங்களையும் உங்கள் பெற்ருேர் உங்களுக்கு ஒரு தீங்கும் வராமல் பற்பல ஆபத்துக்காலங்களில் உங்களுக்கு உதவிசெய்து காப்பாற்றி வளர்த்து வருகிருர். அதற்காக அவர் தன் ஆயுள் உள்ளளவும் உடல் பொருள் ஆவியுங்கூட அர்ப்பணஞ்செய்ய ஆயத்தமாயிருக்கிருர்கள் என்ருல் நீங்கள் அத்தகைய அரிய பெரிய பாதுகாப்புக்களையெல்லாம் பெற்ற பின்னர் அவர்களுக்குச் செலுத்தப்போகும் நன்றிதான் என்ன? நீங்களும் உங்கள் கண்ணை எப்படி காப்பாற்றுகிறீர்களோ அதேபோல் அவர்களையும் உங்கள் கண்ணுகவே மதித்து, போற்றி வாழவேண்டும்.

ஒரு திருத்தம்.

வெண்ணிலா முதல் இதழ் 32 ஆம் பக்கத்தில் முதல் பத்தியின் கடைசி வாக்கியத்தில் "முதலியார்சாவடி" என்பதை நீக்கியும்; 34 ஆம் பக்கத்தில் கடைசி பத்தியை, "உடன்பிறந்தாரிருவரும் தத்தமக்குறிய சொத்துக்களை இதுகாலே ஆண்டு வருகின்றனர்" என்று மாற்றியும் படிக்குமாறு வாசகர்கள் வேண்டப்படுகிருர்கள்.

கட்டுரையாளருக்கு!

நெஞ்சை யள்ளும் சிறு கதைகள், அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், இலக்கிய விமர்சனங்கள், சிறுவர்களுக்கான சிறு கதைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதியனுப்பவும். கேலிப்பேச்சும் தேவை.

எதிர்பாருங்கள்!

சிறந்த எழுத்தாளரால் எழுதிய தொடர்கதை விரைவில் தொடரும்.

தாய்மை.

"சித்தன்"

நாட்டியக்காரியின் ஒய்யார நடையையும் பின்னடையச்செய்யும் கம்பீரமான ராஜநடை. மயிலின் கழுத்தசைவிலே காணப்படும் மந்தகாச நெளிவு. வானவில்லைப் போன்ற வண்ண விசித்திரங்களால் வெளியுலகை மயக்கும் மோஹன சௌந்தர்யம். அழகின் ஒரு திவலை, சிதறி விழுந்ததைப் போன்ற உச்சிக் கொண்டை. இளமையின் ஒயில். அழகால் விளைந்த அகம்பாவம். கன்னித் தன்மையின் கட்டழகு. இவைகளுடன் அதோ, அங்கே உலாவுகிறது அந்தப் பெட்டைக் கோழி!

அதன், கடைக்கண் பார்வைக்காக எத்தனையோ பீடு நடை மன்னர் (சேவல்கள்) உயிரையே கப்பங் கட்டத் தயாராயிருக்கின்றனர். அதனுடைய நடையழகில் நெஞ்சு தடுமாறி தன் வயமிழந்த இளைஞர்கள் எத்தனையோ பேர்கள். அதன் கன்னித் தன்மையைக் குலைக்க — அல்ல — அதன் அழகுக்கு அடிமையாக ஆயிரம் பேர்கள் தவமிருக்கின்றனர்.

இளமையின் ஏகாந்தத்தை இலட்சத்தில் ஒருவர் தானே விரும்புகின்றனர். ஆனால், அவள் பெண்தானே!

* * *

ஒரு சேவலுடன் அந்தப் பெட்டை அதோ வருகிறது. சுயவரம் செய்து கொண்டதா? அல்லது அவன் பலாத்காரத்திற்கு உடன்பட்டு விட்டதா? எப்படியோ! அதன் காதல் வாழ்க்கையிலே எத்தனையோ ரஸமான நிகழ்ச்சிகள். அந்தச் சேவல் கூடலையே விரும்புகிறது. ஆனால், பெண்மை ஏனோ ஊடலையே விழைகிறது. இடையறாத பிணக்கம். பெண்மையின் இயற்கையில் அரும்பிய நாணம்!

அதன் கன்னித்தன்மை கலைந்துவிட்டது. பெண்மைச் செடியில், பூவும் பிஞ்சும் குலுங்குகின்றன. அதோ, பெருமிதத்தோடு தாய்மையின் தனித் தன்மை தோன்ற — அன்புச் சேய்கள் பின்தொடர வருகிறது அந்தப் பெட்டை, தாரகைக் கூட்டத்தில் துலங்கும் வெண்ணிலா போல. தாய்மையின் அன்பு ஒளி வீசுகின்றது அதன் கண்களில்.

தன் அன்புக் குழந்தைகள் ஆனந்த மடைவதையே தனது உணவாக — வாழ்க்கையின் இலட்சியமாக எண்ணுகின்றது. உணவை வாயால் கொத்திக் கொத்திக் கீழே போடுகின்றது. ஏன்? உண்ணக் கற்பிக்கின்றதா? அல்லது தானும் உண்பதுபோல நடிக்கின்றதா?

தாய்மையின் கனிந்த தியாகம் அது. இமையாயிருந்து காக்கின்றது தன் குழந்தைகளை என்று சொன்னால் பொருந்துமா? அதை விட மேலான உவமை யிருந்தால் அதுவும் பொருந்தும்! தன் குழந்தைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் எந்தப் பறவைகளையும் — ஏன், கொடிய விலங்குகளையுங் கூட எதிர்க்க அது பின்வாங்குவதில்லை. தாய்மையின் பழம் பெரு

மையை நிலைநிறுத்த வல்லூறுவுடன் கூடச் சமர் செய்யச் சித்தமாயிருக்கிறது. கண்ணுங்கருத்தும் எப்போதும் அதற்குத் தன் மக்களிடத்தே.

சின்னஞ் சிறுசுகள் தம் மொழியில் ஏதேதோ பேசுகின்றன. அவைகளின் மழலையைத் தாய் அன்புடன் ரஸிக்கின்றது. அந்த இனிமை அதன் உயிர்க்கு அமுத விருந்து!

* * *

ஏதோ ஒரு சப்தம்.

தன் மெல்லிய சிறகை விரித்துத் தன் அன்பு மக்களை அழைக்கின்றது வீணைக் குரலால். அன்னையின் அழைப்பு அவைகளின் செவிகளில் மின்னலைப்போலப் பாய்கின்றது. ஒரு கணப்போதில், இறக்கைக் கூண்டினுள் அவ்வுயிரோவியங்கள் ஐக்கியமாகிவிடுகின்றன.

பெண்மையின் பெருமையைத் — தாய்மையின் தனித்தன்மையை நிரூபித்துக்கொண்டே அமர்ந்துவிட்டது சிலைபோல!

தாய்மை உலகத்தின் வேர். வாயாரப் பாடுவோம் தாய்மையை!

கலை வளர்ப்பீர்!

[புதுவைச் சிவம்]

(சரவணபவா எ. மெட்டு)

பல்லவி

கலைவளர்ப்பீரே கவிதையால் நீரே! (கலை)

அ. ப

கலைவளர்ப்பீரே கவிதையால் நீரே
காணும் பிறநாட்டார் கனஞ்செய்யவே! (கலை)

சரணம்

புலம் விரிந்திடும் புகழ் மலிந்திடும்
புவியிற் சமமே பொருந்தி நின்றிடும்!
நலம் பெருக்கும்விஞ் ஞானக் கல்வியை
நாட்டிலெங்கும் போற்றிவாட்டும்பேதம்நீக்கிக்
(கலை)

வெள்ளிக் காதல்

— பாசுமணி —

என்றுமில்லாமல் அன்று படுக்கையிலிருந்து அதிகாலையிலேயே துள்ளி எழுந்தேன். வெளியேயுள்ள தண்ணீர்த்தொட்டியை அடைந்தேன் ஒரே வெளிச்சம். ஏதோ ஒரு ஜோதி அவ்வெளிச்சத்திற்கு உயிரைத் தந்தது. அத்தொட்டியிலிருந்த குளிர்ந்த தண்ணீரினல் முகத்தைக் கழுவிக்கொண்டேன்; ஒளியைப் பார்த்தேன். பௌர்ணமி சமீபத்திலில்லாததால் அது சந்திரனல்ல என்று எண்ணினேன். வெள்ளி என்று சொல்லுகிருர்களே அதுவாகத்தான் இருக்க வேண்டும் அந்த ஒளி என்ற முடிவுக்கு வந்தேன். என்னை அறியாமல் ஓர் உற்சாகம் உண்டாயிற்று.

வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினேன்; குளத்தை அடைந்தேன். ஸ்நானம் செய்தேன். ஒரு முறை குளத்தைச் சுற்றிவர ஆரம்பித்தேன். என் கண்கள் ஆவலுடன் வானத்தை நோக்கின.

ஆ! அவள் ஓர் அழகிய ரதியேதான். இதுவரை அவளழகைப்போல நான் எங்குமே கண்டதில்லை. நீல மேகம்; ஒளிமிகுந்த முகம்; பல வர்ணங்களோடு கூடிய கவர்ச்சிமிக்கப் பார்வை; இடையே ஓர் புன் சிரிப்பு. அது அவளுடைய பல்லழகை எடுத்துக்காட்டியது. இத்தனை அழகுடைய வெள்ளியின் கவர்ச்சிமிக்க விழிகளைக் கண்ட நான், என் உடலை ஒருமுறை பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டேன்.

சல சலவென நகைத்தாள்.

'மோகினி' என்கிருர்களே அதுவோ! சீ, சீ— இருக்காது.

'மாயை!' என்ற பதில் வந்தது. இல்லை; இல்லை. இயற்கையின் எழில்.

'ஆம்' என்பதுபோன்றஓர் சப்தம். பளீரென்று கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் குலுங்கச் செய்யும் ஓர் ஒளி.

வழியிலே. எழெட்டுக் குதிரைகளுடன் ஒரு ரதம் வருவதுபோல் கண்டேன். வெள்ளியின் ஞாபகம் வந்தது. நின்றேன்; தலையை மேலே உயர்த்தினேன்.

பாவம்! தகப்பனுர் வருகையைக் கண்டு பயப்படுகிருள் பெண்! சற்று முன் ஒளியுடன் திகழ்ந்தமுகம் இப்பொழுது ஒளியிழந்தது. அவள் நீல மேனி சற்று சிவந்தது. தலை குனிந்து சோகமான பார்வையுடன் பின்வாங்கினுள். நெடுந்தொலைவிலுள்ள கருங்காடுகள் போன்ற மேகங்களுக்குள் மறைய முயற்சித்தாள். வெள்ளியின் தோற்றமும் தூரத்திற்குச் சென்றது. வெள்ளியும் சிறு புள்ளிபோல் ஆனுள்.

'பாவம்! என்ன நேர்த்தியான வனிதாமணி! தகப்பன் வந்து பெண்ணின் மனத்தைக் குலைத்துவிட்டானே' என்று இவ்வாறு எண்ணிக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தேன். வெளிச்சம் அதிகமாயிற்று. சூரியன் உதயமாகி விட்டான் என அறிந்தேன். அவள் இன்னும் விரைவாக ஓடி மறைந்துகொண்டிருந்தாள்.

திண்ணையில் வந்து உட்கார்ந்தேன். கதிரவனின் தங்கநிற ஒளி என் கண்களுக்குக் கோபாக்கினி போல் காணப்பட்டது. அவளுடன் பேசியதற்கா இத்தனை கோபம்!

மன்னிப்புக் கேட்டுக் கொள்பவன் போல், இல்லை, இல்லை — அவள் தகப்பனுர் என்பதற்காகத்தான் கீழே விழுந்து நமஸ்கரித்தேன்.

வைகறைப் பொழுது இவ்வாறு வேடிக்கையாகக் கழிந்தது. அவள் தானேவலுவில் என்னை அழைத்தாள்!

கேலிப் பேச்சு

எஜமானன்:- என்ன குமஸ்தா? எந்தக் காலத்துக் கோட்டையே போட்டுக்கொண்டு வந்திருக்கிறீரே! ஒரே அழுக்காய் இருக்கிறதே!

குமஸ்தா:- ஆம் ஸார்! நீங்கள் சம்பளம் உயர்த்திய காலத்தில் தைத்தது.

—ஜி. வேணுகோபால்.

மன்னிப்பு

தங்கம்மாள்:- (கோகிலத்தின் தாய்) என்ன கோகிலம்! வகுப்பில் வயது முதிர்ந்தவள் நீதானும். ஆனுல், படிப்பில் சுத்த மோசமாயிருக்கிருயாமே!

கோகிலம்:- இல்லே அம்மா! உபாத்தியாயினி என்னேவிட வயது முதிர்ந்தவளாச்சே!

—N. D. தயாளன்.

போனகாரணம்

ஜட்ஜ்:- நீ திருடினுய் அல்லவா?

கைதி:- சத்தியமாக இல்லே.

ஜட்ஜ்:- அப்படியானுல் நீ வீட்டின் பின்புறமாக வெளிச் செல்லக் காரணம்.

கைதி:- வீட்டின் முன்பக்கத்தில் ஒரு போலீஸ்காரனிருந்தா னென்பதால்தான்.

—ஆர். தருமன்

சரியான பதில்

தாய்வீட்டிற்குப் போயிருந்த மனேவியிடமிருந்து கணவனுக்கு வந்த கடிதம்;

பிரிய நாதா! நான் சந்தோஷமாயிருக்கிறேன். உங்களேப் பிரிந்துவந்த ஒரு மாதத்திற்குள் என் எடையில் பேர்பாதி குறைந்து விட்டேன்.

கணவன் மனேவிக்கு எழுதிய கடிதம்: பிரிய மனேவி! கடிதங் கண்டேன். இன்னுமொரு மாதத்திற்குக் குறையாமல் அங்கேயே இரு.

—S. R. சந்திரன்.

மந்திரவாதி:- கனதனவான்களே! இப்போது என் கையில் ஓர் லாடு இருப்பதைப் பார்க்கிறீர்கள். இதை உங்களுக்கு இஷ்டமான எந்த இடத்திற்கும் அனுப்பத் தயார்.

ஒருவர்:- எங்கே என் வாய்க்குள் அனுப்பும்.

—R. பாலசுப்ரமணியன்.

சௌ-சௌ

"அமெச்சூர்"

கலிகால மைனர்; ஸ்கூல் டிராமா; சூரப்புலி என்னும் மூன்று ஹாஸ்யத் துண்டுப் படங்களை, சேலம்-மாடர்ன் தியேட்டர்ஸார் "சௌ-சௌ" என்ற பெயரில் வெளியிட்டிருக்கின்றனர். படத்தின் நீளம் 11,000 அடிகள்.

1. கலிகால மைனர்: ஒரு ஹாஸ்யத்துண்டு நிகழ்ச்சி. கற்பனைக்கு அடங்காத கதை. இப்படத்தில் முதல் பரிசைக் "கஞ்சிரா" வித்வானாக நடிக்கும் காளி. என். ரத்தினத்திற்கே தரவேண்டும். வேலைக்காரனாக அவர் நடிக்கும் பாகம் அவ்வளவு உயர்தரமாகக் கூறமுடியாவிட்டாலும் "பரவாயில்லை" என்று சொல்லலாம். துரைராஜின் நடிப்பு சுமார். ராஜகாந்தம் நடிப்பு வழக்கம்போலிருக்கிறது. சங்கீத வித்வானாக நடிப்பவர் N. S. கிருஷ்ணனைக் காப்பியடித்து நடிக்க முயல்கிறார். பிறர் நடிப்பதைப்போல நடித்துத் தன்னை ஆபாசப்படுத்திக் கொள்வதைக் காட்டிலும், சொந்த முயற்சியில் முற்போக்கடைந்தால் நல்லது. இவர் "சிங்காரி லகாரி"யைப் பாடுமிடம் ஹாஸ்யமாயிருக்கிறது. ஒளி; ஒலி பரவாயில்லை. வசனம்; பாடல்கள் அப்படியொன்றும் உயர்தரமாகச் சொல்வதற்கில்லை.

2. ஸ்கூல் டிராமா: விதவா விவாகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சீர்திருத்தக் கற்பனை நிகழ்ச்சி. ஏ. கே. ஸ்வாமியின் கதையமைப்பும் வசனமும் நன்றாயிருக்கின்றன. உடுமலை—நாராயண கவியின் பாடல்கள் வழக்கம்போல் அர்த்தபுஷ்டியுள்ளவைகளாக விளங்குகின்றன. ஒலிப்பதிவு பரவாயில்லை. ஒளிப்பதிவு சில ஆட்டங்களில் (இரவுக்காட்சிகளில்) விசேஷ கவனம் செலுத்தியிருந்தால் நன்றாயிருந்திருக்கும். N. S. கிருஷ்ணன், கொடுத்த வேலையை அவருடைய அளவில் வழக்கம்போல் நடித்திருக்கிறார். T. A. மதுரத்தின் சொற்பொழிவு நன்றாயிருக்கிறது. மற்றவர்கள் தத்தமக்குரிய பாகத்தை ஏறக்குறைய செய்திருக்கிறார்கள். மொத்தத்தில் 'ஸ்கூல் டிராமா' பார்க்கவேண்டிய படம்.

3, சூரப்புலி: வேலுச்சாமி கவி இதற்குக் கதை வசனம் எழுதியிருக்கிறார். அதில் என்ன கருத்தை அடிப்படையாக வைத்திருக்கிறார் என்பதும் அதனால் யாருக்கு என்ன பிரயோசனம் என்பதும் அவரே சிந்திக்கவேண்டிய விஷயங்கள். கற்பனைக் குதிரையை-ஹாஸ்ய ரஸனையுடன்-நாட்டுக்குப் பிரயோஜனமான பாதையில் செலுத்தினால்தான், கலைகாலத்திற்கு அழகு செய்யும். அதை விடுத்துக் கடன் வாங்குவது, கொடுக்காமல் ஊர் ஊராக ஓடுவது-இவைகளில் ஹாஸ்யமோ-அல்லது உண்மையோ கடுகத்தனையும் இல்லை. கடைசியில், "வண்ணான் வண்ணாத்தி"யாக இருந்து கடன் தீர்க்கச்

"மேஜையில் கரண்ட்"

சிறுவர்களே! உங்கள் சிநேகிதன் ஒருவனைக் கூப்பிடுங்கள்;

—"என் மேஜைப் பலகையில் 'கரண்ட்' இருக்கிறது!" என்று சொல்லுங்கள்.

—"போடா, பைத்தியக்காரா!" என்று பல்லை இளிப்பான்.

நீங்கள் சொன்னதை உண்மை என்று நிரூபிக்க ஒரு வழியுண்டு. கீழ்க்கண்டவாறு உன் சிநேகிதனைச் செய்யச் சொல்லுங்கள்!

1) மேஜையின்மேல் கை விரல்களை மடக்கி நன்றாய்ப் படியவைத்துக்கொள்ளவேண்டும், (படத்தில் காட்டியபடி) சுண்டு விரலுக்கு அடுத்த மோதிர விரலை மாத்திரம் (மற்ற விரல்களை அசைக்காமல்) வெளியே நீட்டவேண்டும். முடியாது; ஏமாற்றம் அடைவான்.

2) சரி; எப்படியாவது அந்த விரலை நீட்டி மேஜையின்மேல் படிய வைத்து விடட்டும்; மேஜையில் ஒட்டிக்கொண்டு இருக்கும் விரலை மட்டும் பலகையை விட்டுக் கொஞ்சம் மேலே தூக்கச் சொல்லவேண்டும். அதுதானே முடியாது. முடியவே முடியாது. ஏன்? உங்கள் மேஜைப் பலகையில் 'கரண்ட்' இருக்கிறது! இரகசியம் இப்பொழுது புரிந்ததா? சிரிக்காதே!

—R. சுப்ரமணியன்.

செய்ய வேண்டுமென்று எண்ணின தற்காகவாவது சந்தோஷப்படுகிறோம்.

இதில் காளி, N. ரத்தினம், ராஜகாந்தம் நடிக்கும் குறவன் குறத்திக் கூத்து நன்றாயிருக்கிறது. ரௌடி வெள்ளையப்பனாக நடிப்பவர் தனது அனாயாச நடிப்பினால் பேரைச் சம்பாதித்துக் கொள்ளுகிறார். மற்றவர்கள் எப்போதும்போல் நடிக்கின்றனர்.

ஸ்ரீ-காளி, N. ரத்தினத்திற்குச் சில வார்த்தைகள்:- நாடகமேடையில் தனிப்புகழுடன் விளங்கியவர் காளி N. ரத்தினம். நாடக மேடையில் ஹாஸ்யச் சுவையை அவ்வளவு அழகாக அள்ளித் தருபவர்கள் இதுவரை யாருமே அவருக்குச்சமமாக விளங்கியதில்லை என்னலாம். எல்லா வேடங்களிலும்பிரமாதமாகத்—தனக்கிணை தானேயாக — நடிக்கக்கூடிய அவர், பேசும் படங்களில் ரசாபாசமான பகுதிகளில் நடிக்க ஒப்புக்கொள்வது வருந்தவேண்டிய விஷயம்.

மொத்தத்தில் நாம் மேலே குறிப்பிட்ட இரண்டு மூன்று நல்ல காட்சிகளுக்காகப் படம் பார்க்கலாமேயொழிய—படம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல.

அல்ஜீரியா, 8-5-44.

பிரிய மனைவிக்கு!

பல நலமும் உண்டாவதாகுக. உனது கடிதம் கிடைத்தது. விபரம் அறிந்தேன். எனக்குச் சமீபத்தில் சம்பள உயர்வு எற்பட்டது என்னமோ உண்மைதான். ஆனல், இங்கு சம்பளத்திற்குத் தகுந்த செலவுதானிருக்கிறது. புதுச்சேரியல்ல சாம்பலில் பல் துலக்கிக்கொள்ள. இங்குப் பிரஷ், கோல்கெட்டு மல்லவா வேண்டியிருக்கு!

மாதமொன்றுக்கு 100 ரூபாய் பெறுகிருய். அதை அதிகச் செலவு செய்யாமல் மீதப்படுத்தி வைப்பாயாக! செலவுகளைக் குறித்துக்கொண்டுவா. நான் வருய்போது என்னிடம் கணக்குக் காட்டவேண்டும்.

குழந்தை "அப்பா! அப்பா!" என்று சொல்லித் தேடுகிறதாக எழுதியிருந்தாய். அப்பா, படத்திலிருக்கிருர் என்று சொல்லி வீட்டிலிருக்கும் என் படத்தைக் காட்டு. ஆமாம்! குழந்தை சரியாக நடக்கிறதா? குழந்தையிடம் சொல்லு, அப்பா சீக்கிரம் வந்துவிடுவார் என்று. நான் வீரப் புகழுடன் வீட்டிற்குத் திரும்பும் நாள் அதிக தூரத்திலில்லை.

இப்படிக்கு,
உனது பிரியமுள்ள கணவன்,
காத்தவராயன்.

புதுச்சேரி, 10-6-45.

ஆசையுள்ள அத்தானுக்கு!

அடியாள் நமஸ்காரம் தங்களுக்குரியதாகுக! குழந்தைக் குதித்து விளையாடுகிறது.

கடிதம் கிடைத்தது. தங்கள் புத்திமதிகளைப்போல் நடந்துகொண்டுதான் வருகிறேன். தாங்கள் எனக்கு எழுதிவைத்திருக்கும் பணத்திற்குத் தகுந்த செலவுதான் எற்பட்டிருக்கிறது புதுச்சேரியில். சண்டைக்கு முன்பிருந்த புதுச்சேரியையே கனவு கண்டு கொண்டிருக்கவேண்டாம்! அது முற்றும் நேர்மாருக மாறிவிட்டது என்பதைத் தங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். நானும் பிள்ளையும் உயிர்வாழ வேண்டியதற்குத் தகுந்த செலவுதான் செய்துகொண்டு வருகிறேன்.

வரவு, செலவு கணக்குக் குறித்து வைக்கவேண்டும். ஆமாம்! தங்கள்

சமுகத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலை போதாதென்று, கணக்கப்பிள்ளை வேலையையும் செய்யவேண்டும்போலும்! தங்களிஷ்டம் அதுவானால் நான் என்ன சொல்லட்டும். தங்களிஷ்டத்தைப் பூர்த்திசெய்யத் தாள்பஞ்சமல்லவா தடையாயிருக்கிறது. சண்டைக்குமுன் ஒரு தம்பிடிக்கு ஒரு தாள் கிடைத்தது. இப்போது தாளொன்று ஓர் அணா, அதுவும் கிடைப்பது அரிதாயிருக்கிறது. அந்த விலைகொடுத்து, தாள் வாங்கிக் கணக்கெழுதுவது, வீண் செலவாகும். நாலு தாள் வாங்கும் காசை, குழந்தைக்கு எதாவது தின்பண்டம் வாங்கிக் கொடுக்கலாமென்றெண்ணுகிறது என் மனம்; ஆதலால், தாங்கள் எனக்கு மாதமொன்றுக்குக் கொடுக்கச் சொல்லியிருக்கும் பணத்தையும், எனக்கு இப்பஞ்சகாலத்தில் எல்வளவு செலவாகும் என்பதையும் குறித்துவந்தால், வரும்போது கணக்குப் பார்த்துக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

வெற்றியோடு விரைவில் வீடு திரும்பவேண்டுமென்று இறைவனிடம் பிரார்த்திக்கும் தங்கள் பிரியமுள்ள மனைவி,

மங்கம்மாள்.

அல்ஜீரியா, 12-7-45.

குழந்தையும் நீயும் யாதொரு குறையுமில்லாது செளக்கியமாக இருக்க ஆண்டவன் அருள்புரிவானாக!

கடிதம் வந்தது. விபரம் அறிந்தேன். "பஞ்சம்! பஞ்சம்!! என்று பாடுகிறாய். என்ன பஞ்சம் உனக்கு மட்டும் வந்துவிட்டது. தாள் பஞ்சமென்கிறாய், இங்கு, சாதாரண விஷயங்கூட நல்ல அழகிய ஆர்ட்பேப்பரில் அச்சடித்து இனாமாக விநியோகம் செய்கிறார்கள்! சரி! அங்குத் தாள் பஞ்சமாயிருந்தால் போகட்டும்; ஆனால், அவசியம் கணக்குக் குறித்து வைக்கவேண்டும். குறத்திகளுக்குப் பஞ்சமில்லையே அங்கு! அவர்களிடம், கணக்கை உன் கைகளில் பச்சைகுத்தி வைத்துக்கொண்டு வா. நான் வந்து மொத்தம் கூட்டிக் கணக்குப் பார்த்துக்கொள்ளுகிறேன். தாள் வாங்கும் செலவைவிடக் குறத்திக்குக் கொடுப்பது குறைவாகும். மற்றவைக்கு மறு கடிதத்தில்.

இங்ஙனம்,

உனது நினைவாயிருக்கும்

கணவன்,

காத்தவராயன்.

தேவை!

நமது "வெண்ணிலா"வை விற்பனை செய்ய ஏஜண்டு இல்லா ஊர்களில் ஏஜண்டு தேவை.

மானேஜர்,
"வெண்ணிலா"
22, கந்தப்ப முதலியார் வீதி,
புதுச்சேரி.

பெரியார் பெருந்தொண்டு.

(ஓர் கவிதை நூல்.)

விலை அணா 8.

கிடைக்குமிடம்:-

பூங்கொடிப் பதிப்பகம்,
புதுச்சேரி.

Reg. No. "VENNILA"

T20
R00

Edited and Published by P. Sundaravelu, 22, Kandappa Mudaliar Street, Pondicherry. Printed at the Ananda Press, Pondy. (Tirages: Deux Milles)